Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-23 07-03-2005 திங்கட்கிழமை ஓசை -17



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464

இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11456)

-மக்கள், போராளிகள் கொலைகள் தொடர்பாக-

## தீர்க்கமான முடிவைத் தலைமைப்பீடம் எடுக்கும் சூழ்நிலை நெருங்கி வருகிறது!

### அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**தமிழ் மக்கள் கொல்லப்படுவதையும், எமது போராளிகள் கொல்லப்படுவதையும் எங்களுடைய தலைவர் தொடர்ந்தும் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க மாட்டார். நிச்சயமாக எமது தலைமைப்பீடம் மிக விரைவில் இதற்கொரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற சூழலை நோக்கி நெருக்கமாக வந்துகொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன் என தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஒளிபரப்பாகிய இப்பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்;

தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஏனெனில் எங்களுடைய தலைவர் இந்தவிடுதலை அமைப்பைத் தொடங்கியதும், இந்த விடுதலைப்புலிகள் அமைபபு ஒரு தேசிய விடுதலை அமைப்பாக பரிணாமம் பெற்று பெரியதொரு பலங்கொண்ட படைக்கட்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

### புனரமைப்பில் பங்கேற்கும் ஐ.நாவின்.விருப்பம் அரசால் நிராகரிப்பு!

இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான புனரமைப்புக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பில் தானும் பங்கேற்க ஐ.நா விருப்பம் தெரிவித்த போதும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா செயலாளர் அலுவலகம் சிறிலங்கா வெளி விவகார அமைச்சிடம் தனது விருப்பதைத் தெரிவித்த வேளை சிறிலங்கா அரசாங்கம் இதனை நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக தற்போதுள்ள ஒழுங்கு திருப்திதரக்கூடிய வகையில் உள்ளமையால் மாற்றம் மேற்கொள்ள வேண்டிய தேவை எழவில்லை என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது இந்த அமைப்பில் ஜப்பான்,நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 25 நாடுகள் கூட்டுத் தலைமை வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### விடுதலைப்புலிகளை படைத்தரப்பு பகிரங்கமாகவே சண்டைக்கு இழுக்கிறது!

மட்டு-அம்பாறை அரசியல்துறைப்பொறுப்பாளர்

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு படைத்தரப்பினர் பகிரங்கமாகவே சண்டைக்கு இழுக்கின்றார்கள் என விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிரிமிச்சயில் நேற்று முன்தினம் காலை 7.00மணியளவில் நடத்தப்பட்ட இராணுவத்தின் பதுங்கித் தாக்குதலில் போராளி புஸ்பராசா என்பவர் கொல்லப்பட்டமை தொடர்பாகவே அவர் இவ்வாறு கூறினார்.

சம்பவம் தொடர்பாக தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ள அவர், கிரிமிச்சை சம்பவம் இதனையே வெளிப்படுத்தியுள்ளது என்றும் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில், அண்மைக்காலச் சம்பவங்கள் விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

~சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை~

### அலுவலகம் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பரமேஸ்வராச் சந்தியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் மீது சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசாரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தமான தாக்குதலைக் கண்டிக்கும் விதமாக இன்று யாழ். கோவில் வீதியிலுள்ள இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக மாணவர்கள் திரண்டு தமது எதிர்ப்பினைக் காட்டவுள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெறவுள்ள இப் போராட்டம் முற்பகல் 11 மணியளவில் நிறைவு பெறும் இதன் போது இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத் தலைவரிடம் படையினரின் யுத்த நிறுத்த

(12ஆம், பக்கம் பார்க்க)

### இனந்தெரியாதோர் நடத்தியசூட்டிற்கு பொலநறுவையில் ஆறு பேர் பலி

பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப் புறத்திலுள்ள வெலிகந்தை கொலக்குனாவெளி கிராமத்தில் நேற்றிரவு இனம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி பிரயோக தாக்குதலில் ஆறு பேர் பலியானார்கள். இந்த கிராமத்திலுள்ள மூன்று வீடுகள் இனம் காணப்பட்டு அங்கு இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் நான்கு முஸ்லிம்கள் ஒரு தமிழர் மற்றும் ஒரு சிங்களவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### ராணுவத்தின் அத்துமீறல்களைக் கண்டித்து இன்று துக்கதினம் அனுஷ்டிக்குக!

-தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வேண்டுகோள்

சிறிலங்கா இராணுவத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகளையும் அத்துமீறல்களையும் கண்டிக்கும் வகையில் யாழ்.குடாநாட்டில் இன்றைய நாளை துக்கதினமாக அனுஷ்டிக்கும் படி தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### போராட்டம் கைவிடப்பட்டது

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைக் கிராமமான புல்மோட்டையில் நேற்று மக்கள் போராட்டம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இராணுவ அதிகாரிகள் காவல்துறை

(12ஆம் பக்ககம் பார்க்க)

### நேரம் நீடிப்பு

மகாசிவராத்திரியை முன்னிட்டு இன்று தொடக்கம் ஒன்பதாம் திகதிவரை முகமாலை சோதனைச் சாவடி காலை 6.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணி வரை திறந்திருக்குமென சிறிலங்காப் படையினர் அறிவித்துள்ளனர்.

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உத்தியோகப் பற்றற்ற அரசு இருக்கிறது!

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வீடுகளைப் புனரமைப்பதற்கு ஆறு பில்லியன் ரூபாவை அரச முகவர் நிலையங்களுக்கு ஊடாக உலகவங்கி செலவிடும் என்றும், விடுதலைப்புலிகளுடனான கலந்தாலோசனையுடன் இந்த நிதி செலவிடப்படும் என்றும் உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்தார் என சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் நாம் கலந்தாலோசிப்பது குறித்து ஊடகத்துறையின் ஒரு தரப்பும் தாய்நாட்டுக்கான தேசிய இயக்கமும் என்னைக் கடுமையாக விமர்சித்துள் ளன. உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப் பட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி-ஒருவகையான உத்தியோகப் பற்றற்ற அரசு இருக்கிறது என்ற உண்மை பிரகாரமும், அரசாங்கத்துடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அதுவொரு தரப்பு என்பதாலும் சட்டப்படியான பங்குதாரராக இருப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு தகுதியுண்டு என்றும் இந்த பேட்டியில் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளா

அரசாங்கமாயினும், வேறெந்த அமைப்பாயினும் விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

*உடன் தொடர்பு கொள்ளவும்*

கொலண்டிலிருந்து வந்த வசந்தன் பருத்தித்துறையைச் சேர்ந்த த.பிரபா என்பவரை 10.03.2005 ஆம் திகதிக்கு முன் சந்திக்குமாறு வேண்டுகின்றார். தகவல்:-நந்தா (5772)

## விற்பனையாகின்றது

அஸ்ரன் பதிப்பு G.C.E O/L கடந்த கால வினாவிடை (1993-2004) புத்தகங்கள் பெற்றுக் கொள்ளவும், போட்டோ பிரதி செய்து பெற்றுக்கொள்ளவும். குயிலன் புத்தகசாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (சி.11544)

## புதிய பிரிவு ஆரம்பம்

*புதுக்குடியிருப்பில் ஆங்கிலம்பேச, எழுத,வாசிக்க*

புதிய பிரிவு ஆரம்பம்

ஆசிரியர் :- இ.றஜித்

பெயர் பதிந்தவர்களும், பதிவு செய்யவுள்ளோரும் 09.03.2005 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு வருகை தரவும்.

இடம் :- அரச வைத்தியசாலை அருகாமை, முல்லைவீதி, புதுக்குடியிருப்பு.

(5491)

## கட்டாக்காலிகள் தொல்லை

யாழ்.வலிகாமம் மேற்குப் பிரதேச விவசாய நிலங்களில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் அப்பகுதி விவசாயிகள் பெரும் இழப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

பொன்னாலை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், அராலி போன்ற பகுதி விளைநிலங்களில் தொடரும் இக்கட்டாக்காலி மாடுகளின் பிரவேசத்தைக் கட்டுப்படுத்த பிரதேச சபையினரும், விவசாயத் திணைக்களமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. (33)

## 73 ஆம் நாள் நினைவு நாள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 26 |
| 08 | 12 |
| 1941 | 2004 |



**சுப்பிரமணியம் சரஸ்வதி**
**உடுத்துறை வடக்கு**
**தாளையடி**

மாவீரர்களான கப்டன் வண்டு, வீரவேங்கை சுபாசினி ஆகியோரின் தாயாரான சுப்பிரமணியம் சரஸ்வதி அவர்கள் கடந்த 26.12.2004 அன்று சுனாமி கடல் அனர்த்தத்தினால் சாவடைந்தார். இவரது 73 ஆம் நாள் நிகழ்வினையும், கிரியையும் எதிர்வரும் 8 ஆம் திகதி (செவ்வாய்கிழமை) இவரது தற்காலிக இல்லத்தில் செய்யவிருப்பதால் இந்நிகழ்விலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்:-**
**மகன்**
**சுப்பிரமணியம் பரமேஸ்வரன் (ரகு)**

(5773)

# வீரவணக்கம்



*தாயக விடுதலைக் கலைஞரும்*
*கலை இலக்கியப் படைப்பாளியும்*
*குறும்பட இயக்குனருமான*
*நாட்டுப்பற்றாளர்*
*க.சிவராசா*
*விழிச்சிட்டி, தெல்லிப்பழை*
*யாழ்ப்பாணம்.*
*த.மு:-71 குமரபுரம் பரந்தன்.*
*கிளிநொச்சி.*

## நாட்டுப்பற்றாளர்

# க.சிவராசா

தாயக விடுதலைக்கும், மக்கள் எழுச்சிக்கும் உரம் சேர்க்கும் சிறுகதைகள், கவிதைகள், வானொலி நாடகங்கள், கட்டுரைகள், ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகைக்கான பிரதிகள், குறும்படப் பிரதிகள் எனப் பன்முகப்படைப்புக்களை படைத்தளித்தவரும், நிகழ்ச்சித்தயாரிப்பாளரும், குறும்பட இயக்குனருமாக இறுதிவரை இயங்கி எம்மை விட்டுப்பிரிந்த நாட்டுப்பற்றாளர் க.சிவராசா அவர்களின் பிரிவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். கலைஞர் க.சிவராசா அவர்கள் எழுதி இயக்கிய "களைகள்" குறும்படம் அண்மையில் வெளியிடப்பட்டது. மற்றும் "அம்பலம்" அரசியல் அங்கத நிகழ்ச்சியும் குறும்படமும் இயக்கிக்கொண்டிருந்த க.சிவராசா அவர்கள் அவை முற்றுப்பெற முன் திடீரென மறைந்து விட்டார். அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும், துயரும் அடைகின்றோம். அன்னார் விட்டுச்சென்ற பணிகளை நிறைவு செய்து எமது இலட்சியம் வெல்ல அயராது உழைப்போம். மறைந்த எமது கலைஞருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சிறுகதை, கவிதை ,நாடகம்,*
*குறும்படம், கட்டுரை எனப்பல*
*நிறையவே யாத்தாய்! ஈழப்*
*போரினிற் குழைத்தாய்; தலைவன்*
*விருதினைப்பெற்றாய்! பலரும்*
*விரும்பிடும் கலைஞன் ஆகி*
*நிறைந்தனை நெஞ்சம் எல்லாம்*
*நின்னையா இழந்தோம்;தாங்கிடோம்!*

*விடுதலை உணர்வை நாளும்*
*விதைத்தனை ஐயா! மண்ணில்*
*கடுமிடர் காலம் எல்லாம்*
*கடுமையாய் உழைத்தாய்; தேசம்*
*படைத்திடும் கனவைப் படைத்தாய்*
*பற்றுளம் கொண்டாய்; நிலையாய்*
*விடைபெறும் போதிலும் எங்கள்*
*விழிகளில் நிதர்சனம் ஆனாய்*

**பொறுப்பாளர்,**
**போராளிகள், கலைஞர்கள்,**
**பணியாளர்கள்,**
**நிதர்சனம்.**

(சி-11546)

# விபத்தின் தடயங்களை படையினர் அகற்றுவது; அசுர பலத்துடன் மக்களை போராட வைக்கின்றது

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். செ. கஜேந்திரன்

(யாழ்ப்பாணம்)

**இராணுவ வாகன விபத்துக்கள் இடம்பெறும் போது சம்பவ இடங்களில் இருந்து தடயங்களை அகற்றுவதன் மூலம் விபத்துக்குக் காரணமான இராணுவச் சிப்பாய்களை சட்டத்தின் பிடியிலிருந்து பாதுகாப்பதற்கு சிறிலங்கா பொலிசாரும், இராணுவத்தினரும் முயற்சிக்கும் சந்தர்ப்பங்களே பொது மக்களை சீற்றம் கொள்ள வைக்கிறது.இதுவே மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களை நடத்தும் அசுர பலத்தை அவர்களுக்கு வழங்குகின்றது.**

இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களாக நிலவி வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இராணுவத்தினரது அராஜகங்களுக்கு ஆப்பு வைத்துள்ளதுடன் அரச அத்து மீறல்களுக்கும் பெரும் தடையாகவுள்ளது.

இதனால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறிவடையச் செய்வதன் மூலம் மீண்டும் தனது வல்லாதிக்க வெறியை எம் மண்ணில் காட்டுவதற்கு அரசு அதிக சிரத்தையுடன் இருக்கிறது. இதற்காக பல முயற்சிகளிலும் அரசும் அதன் கூலிப் படைகளும் ஈடுபட்டு வருகின்றன.

இம் முயற்சியின் ஒரு வடிவமே இவ் விபத்துச் சம்பவங்களும் படையினரால் மக்கள் மீது புரியப்படும் அடாவடித்தனங்களுமாகும். தமிழ் மக்களை பாதிப்படையச் செய்வதன் மூலம் புலிகளை மீண்டும் போருக்கு அழைக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் அரசு இவற்றைச் செய்து வருகின்றது.

எனவே நாம் அனைவரும் உண்மை நிலையை உணர வேண்டும். படையினர் தமது அராஜகத்தை எம் மீது திணிக்க முற்படும் போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்து எமது உரிமைகளை நிலைநாட்ட வேண்டும்.

மிகச் சிறிய விடயமான விபத்துச் சம்பவங்களில் எமது மக்களுக்கான நியாயத்தை வழங்காது சட்டத்தின் ஓட்டை வழியே படையினரை தப்பிச் செல்ல அனுமதிக்கும் அரசும், அதன் சட்டத்துறை மற்றும் நீதி நிர்வாக கட்டமைப்பும் எப்படி எமது மக்களுக்கான உரிமைகளை தரப் போகின்றது என்ற உண்மையை நாம் உணர்வது அவசியமென அவர் மேலும் தெரிவித்தார். (33,41,36)

## மக்களின் தாக்குதலில் 10 படையினர் காயம்

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளியன்று இடம்பெற்ற மக்களின் போராட்டங் களை அடக்குவதற்கு முற்பட்ட இராணுவம் மற்றும் பொலிசார் மீது மக்கள் நடத்திய ஆவேசத் தாக்குதல்களில் ஆறு இராணு வத்தினரும், நான்கு பொலிசாரும் காயங் களுக்குள்ளாயிருப்பதாகத் தெரிய வரு கின்றது.

இவர்கள் தற்போது பலாலி இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் இருவர் கல்லெறிபட்டு பார்வை இழந்திருப்பதாகவும் படை அதிகாரியொருவர்தெரிவித்தார் (33)

## பல்கலை மாணவர் ஒன்றியம்; கண்காணிப்புக்குழுவுக்கு மகஜர்

(நல்லூர்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் ஆகியவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை மற்றும் அவற்றிற்கு சேதங்களை ஏற்படுத்தியமையைக் கண்டித்து நேற்றுப்பகல் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மகஜர் ஒன்றினை போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிடம் கையளித்துள்ளது..

பல்கலைக்கழகத்தில் இருந்து மாணவர்கள் சென்று பகல் 11.00 மணிய ளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இந்த மகஜரைக் கையளித்துள்ளனர். (சு,41,36)

## குடாநாட்டுக்கு மேலும் கலகமடக்கும் படை

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ் நிலையை அடுத்து மேலும் ஒரு தொகுதி கலகமடக்கும் பொலிசார் மற்றும் கலகமடக்கும் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் அதிகாலை 3.00 மணியளவில் பலாலி இராணுவத் தளத்திற்கு கொண்டு வந்து இறக்கப்பட்டிருக்கின்றனர்.

இதில் சுமார் 300 கலகமடக்கும் பொலிசார் மற்றும் 350 இற்கும் மேற்பட்ட கலகமடக்கும் விசேட அதிரடிப்படையினர் விசேட விமானங்கள் மூலம் கொண்டு வரப்பட்டனர். (33)

## கடற்கரைப் புனரமைப்பு குறித்து முக்கிய தீர்மானம் நிறைவேற்றம்

(வடமராட்சி)

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை பிரதேச புனரமைப்புத் தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கங்கள் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

இது தொடர்பான கூட்டம் புலோலி மேற்கில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன;நான்கு அடி உயரத்திற்கு வான் அணைகள் கட்டுதல் தொண்டமனாறு முதல் பருத்தித்துறை முனை வரையுள்ள பகுதிகளில் வான்களைப் புனரமைத்தல், ஆழிப் பேரலையால் சிதைவுண்ட முருகைக் கற்கள் முன்பு இருந்த அணைக்கட்டிற்கு எடுத்துப் போடல், வான் பாதையை ஆழமாக்கல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டும்.

வேலைகள் இடம்பெறும் போது படையினர் பார்வையிடலாம் ஆனால் நிர்வாகம் செலுத்தக்கூடாது படகுகள் வரும் பாதையை படையினர் வரையறுக்கக் கூடாது. படகுகள் கட்டப்படும் இடங்களை படையினர் கட்டுப்படுத்தக் கூடாது போன்ற தீர்மானங்களே எடுக்கப்பட்டன.

சமாசங்களின் இக் கலந்துரையாடலின் போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் இணைப்பாளர் க.சூரியகுமாரன் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன், கடற்புலிகளின் வடமராட்சி அரசியற் துறைப் பொறுப்பாளர். அன்பழகன், சுனாமி அனர்த்த கூட்டுறவுச் செயலணிப் பணிப்பாளர் பாலையா ஆகியோர் கலந்து கொண்டனர். (கா)

## கடற்றொழிலாளர் சங்கங்கள் யாழ்.அரச அதிபருக்கு மகஜர்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு மற்றும் வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசங்கள் யாழ்.அரச அதிபரிடம் மகஜர் ஒன்றினை கையளித்துள்ளன.

இந்த மகஜர் யாழ்.அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்படுவதற்காக நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் கையளிக்கப் பட்டது.

தொண்டமனாறு முதல் பருத்தித்துறை வரையான கடற்கரை பகுதியில் வான்களை புனரமைத்து கரையோர அணை அமைக்கப்பட வேண்டுமென்று கோரியும் அவ்வாறு செய்வதற்கு இராணுவத்தினர் தடையாக இருக்கும் பட்சத்தில் வெகுசனப் போராட்டங்கள் நடத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் என்று தெரிவித்துமே இம் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (கா)

## கிராம அலுவலர்களை இடமாற்றத் திட்டம்

(நல்லூர்)

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களுக்கு இடமாற்றத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

இடமாற்றம் சம்பந்தமான சுற்று நிருபம் மற்றும் உரிய படிவங்கள் அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (41)

## முதியோர் சங்க அங்குரார்ப்பணம்

(நல்லூர்)

மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவு முதியோர்களுக்கான சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கிராம அலுவலர் சு.பூபாலசிங்கம் தலைமையில் அவரது அலுவலகத்தில் இன்று நண்பகல் 11.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முதியோர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளன.

இந் நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் ந.புரட்சிதாசனும் கலந்து கொள்ளவுள்ளார். (41)

தென்மராட்சி பிரதேசத்தில்

## மீளக்குடியமர்ந்த மக்கள் மீது படையினர் புதிய கெடுபிடி!

(தென்மராட்சி)

மறவன் புலோ மேற்கு கைதடி நாவற்குழி பிரதேசங்களில் கடந்த வருடம் சிறிலங்கா படைகளின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக் குடியமர அனுமதியளித்த சிறிலங்கா படைத்தரப்பு இப்போது இப்பிரதேச மக்கள் மீது கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நேற்று முன்தினம் முதல் இப்பிரதேச இராணுவக்கட்டளை அதிகாரியின் பணிப்பிற்கு அமைவாக இப்பிரதேசத்தினுள் இரவு ஒன்பது மணிக்கு மேல் மக்கள் பிரவேசிப்பது தடை செய்யப்பட்டு இருப்பதாகவும், காலை ஆறு மணிவரை இத்தடை அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பிரதேச மக்கள் கடும் விசனம் அடைந்து இருப்பதுடன் இத்தடை நடவடிக்கையை உடனடியாகப் படையினர் விலக்காவிடில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமையே ஏற்படுமென பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## 35 நூலகங்கள் தரமுயர்த்தப்படும்

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சி மன்றஙகளின் கீழ் இயங்கும் 35 நூலகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுத் தரமுயர்த்தப்படவுள்ளன.

அறிவுசார் விருத்திகளையும் சமூக மேம்பாட்டையும் கருத்தில் கொண்டே இந்த நூலகங்கள் தரமுயர்த்தப்பட விருக்கின்றன. (33)

## அடையாள அட்டை வழங்கல்

சுனாமி ஆழிப் பேரலையால் தேசிய அடையாள அட்டைகளை தவற விட்டோர், மற்றும் சேதத்திற்குள்ளான அடையாள அட்டைகளை புதுப்பித்தல் போன்றவற்றுக்கான விண்ணப்பங்களை பெற்று அடையாள அட்டை வழங்கும் சேவை நேற்றும், நேற்று முன்தினமும் வடமராட்சியில் இடம் பெற்றுள்ளது (கா)

## வரணிப்பகுதி விளைநிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு

(வரணி)

யாழ்.வரணிப்பகுதியில் உள்ள விளை நிலங்கள் பலவற்றிலும், சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இப்பகுதியிலுள்ள விளை நிலங்கள் பலவும் பயிர்ச்செய்கைகளுக்குப் பயன்படுத்த முடியாது பாரிய குழிகளுடன் காணப்படுகின்றன.

காணி உரிமையாளர்களின் அனுமதியுடனும், அனுமதி இல்லாமலும் இத்தகைய சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்வதால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (33)

## நகுலேஸ்வரத்தில் சிவராத்திரி

வலி வடக்கு பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை மகா சிவராதிரி விழா கொண்டாடப்படவுள்ளது.

இந் நிகழ்வில் நகுலேஸ்வர ஆலய பிரதமகுரு நகுலேஸ்வரக் குருக்களின் ஆசி யுரையைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (41)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கற்றல் உபகரணம் அன்பளிப்பு

(தும்பளை)

சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்து யாழ்.வடமராட்சி தும்பளை புனித அந்தோனியார் ஆலயத்தில் தங்கியுள்ள மாணவர்கள் 50 பேருக்கு கற்றல் உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.

இந்த ஆலயத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நல மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இவ் உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (33)

## பெற்றுக் கொள்ளவும்

கந்தையா சாரதாதேவி, பலாலி கிழக்கு வசாவிளான் எனும் முகவரியுடைய தேசிய அடையாள அட்டையும், இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். (சு)

# குறைந்த செலவில் சூடடிக்க நவீன இயந்திரம் அறிமுகம்!


வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் புதிதாக சூடடிக்கும் இயந்திரம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது. மேற்படி இயந்திர அறிமுக விழா கடந்த வியாழக்கிழமையன்று பூநகரிப்பிரதேச செயலர் பிரிவில் பூநகரிப்பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. பூநகரி ஆலடிக் கிராமத்து வயலில் இவ் இயந்திரம் மூலம் சூடடிப்பு ஆரம்பித்து வைக்கப்பெற்றது.


இவ் இயந்திரத்தின் மூலமாக ஒன்றரை மணிநேரத்தில் ஒரு ஏக்கர் வயல் நெற்சூடு அடிக்கமுடியுமெனவும், இதன் மூலம் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக நெற்சூடடிப்புத் தாமதமாவதனைத் தவிர்த்து, வயல்களில் நெல் அறுவடை நடைபெற்ற உடனேயே சூடடிக்கக்கூடிய இலகு முறையினை ஏற்படுத்தப்பட்டுள்ளதெனவும் பூநகரிப் பிரதேசச் செயலர் தெரிவித்துள்ளார்.


மேற்படி இயந்திரத்தின் மூலம் சூடடிக்கும் நடவடிக்கையினை மேற்கொள்கையில் ஒரு ஏக்கர் வயல் சூடடிப்பதற்கு 500 ரூபா கூலியாகப் பெறப்படுகிறது. மற்றும் நெற்கதிரினை இயந்திரத்திற்கு எடுத்துக் கொடுப்பதற்கும் இயந்திரத்திலிருந்து வெளியேற்றப்படும் வைக்கோலினை அப்புறப்படுத்துவதற்குமாக மூன்று தொழிலாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஒருநாளிலேயே பல வயல்களில் உள்ள நெற்சூடுகளை குறைந்த செலவில் குறிப்பிட்ட ஆளணியுடன் அடிக்கக் கூடிய ஒரு நிலையினைப் புதிய இயந்திரம் தோற்றுவித்துள்ளது. இதன் காரணமாக சூடடிப்பதற்குத் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக வயல்களில் அரிவு வெட்டப்பட்டு, அந்தந்த வயல்களில் சூடுவைக்கப்பட்டு பல நாட்கள் அதாவது குறைந்தது இரண்டு மாதங்கள் வரை சூடடிப்பதற்காகக் காத்திருந்த நிலைமையினை, இவ்வியந்திரத்தின் மூலம் சீர்செய்யப்பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பூநகரிப் பிரதேசத்தில் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நெற்செய்கையிலீடுபட்ட நூற்றிற்கு எண்பது வீதமான விவசாயிகள் தற்போதும் அறுவடை முடிந்ததும் , அந்தந்த வயல்களிலே நெற்சூடுகளை வைத்து விட்டு சூடடிப்பதற்காகக் காத்திருப்பதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த நிலையில் பூநகரி விவசாயிகளின் கோரிக்கைக்கமைவாக பூநகரிப் பிரதேச செயலரின் வேண்டுகையின் பெயரில் வன்னி வேளான் தொழில்நுட்ப நிறுவனத்தினர் மேலும் பல சூடடிக்கும் இயந்திரங்களை பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு இலகு கடன் முறையில உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பெற்றுள்ளதென வன்னிவேளான் தொழில்நுட்ப நிறுவனப் பொது முகாமையாளர் புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார். (சோ)







## கண்கற்றாக் சத்திரசிகிச்சை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கண்கற்றாக் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது. எனவே கண்கற்றாக் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சதானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ)

# வட்டுவாகல் காவல்துறை சீர்திருத்தப்பிரிவை சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகள் பார்வை

**தமிழீழ காவல்துறையினரின் வட்டுவாகல் சீரதிருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.**

கடந்த வெள்ளி, சனி ஆகிய நாட்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு வதிவிடப் பிரதிநிதி பமிலா சதாகிஸ், மகிடேம்ஸ், எவிலிமேயர் வெ...கள உத்தியோகத்தர் டங்கன் ஆகியோர்கள் வட்டுவாகல் காவல்துறை சீர்திருத்தப்பிரிவினைப் பார்வையிட்டனர். குற்றப்புலனாய்வுப்பிரிவுக் கண்காணிப்பாளர் தே.கானகன் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் சி. சிவனேசராசா குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நாகபரமநாதன் ஆகியோர் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளை வரவேற்று, அவர்களுடன் கலந்துரையாடிய பின் தடுத்து வைத்திருப்பவர்களைப் பார்வையிட்டு சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சீர்திருத்தப் பிரிவினையும் தடுத்து வைத்திருப்பவர்களையும் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நல்ல முறையில் பிரிவினை நிர்வகித்து வருவதுடன், தடுத்து வைத்திருப்பவர்களையும் அவர்களுக்கான வசதிகளையும் சிறந்த முறையில் செயற்படுத்தி வருவதனையிட்டு நன்றி தெரிவித்துள்ளார்கள்.

# வெதுப்பியின் விற்பனை விலை பதினெட்டு ரூபாவாக தீர்மானம்

(அலுவலக செய்தியாளர்)

வெதுப்பி ஒன்றின் விற்பனை விலை நேற்று முதல் 18 ரூபாவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதென தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டுப்பகுதியினர். தெரிவித்துள்ளனர்.எனவே தீர்மானிக்கப்பெற்றுள்ள மேற்படி விலைக்கமைவாக வெதுப்பியினை விற்பனை செய்யும்படி வெதுப்பக உரிமையாளர்களை வேண்டியுள்ளதுடன், வெதுப்பியின் நிறையும் தரமும் பேணப்படவேண்டுமெனவும் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)

# உந்துருளி பள்ளத்தில் வீழ்ந்ததில் பயணித்த இருவர் காயம்

(மல்லாவி)

துணுக்காயில் உந்துருளி ஒன்று பாதையைவிட்டு விலகி பள்ளத்தில் விழ்ந்ததில் அதில் பயணம் செய்த இருவரும் காயமடைந்து ஒருவர் மல்லாவி மருததுவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிகிழமை இடம்பெற்றது.

காலை 8.00 மணியளவில் மல்லாவி நகர்ப் பகுதியில் இருந்து அதிவேகத்தில் சென்றவர்கள் கொத்தம்பியாகுளம் திரும்பு முனையில் சென்று திரும்பும் போது பாதையை விட்டு உந்துருளி பள்ளத்தில் விழ்நததில் இருவரில் ஒருவரான ந. முருகவேல்(வயது -38) கோட்டை கட்டிய குளத்தைச் சேர்ந்தவர் தலையிலும், கையிலும் பலத்த காயங்களுடன் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருடன் பயணம் செய்த திரவியநாதன் சிறிதரன் (வயது -27) என்பவர் சிறுகாயங்களுக்குள்ளானார். (24)

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவ இலங்கை செஞ்சிலுவை சங்கக் குழு வருகை

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன் இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமைப்பீடத் தலைவர் ஜகத்அபயசிங்க, தேசியச் செயலாளர் நிமால் குமார் உட்பட 13 பேர் கொண்ட குழு எதிர்வரும் ஒன்பதாம் திகதி முல்லைத்தீவிற்கு வருகை தரவுள்ளதாக முல்லை மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா தெரிவித்தார்.

உடனடியாக 1000 பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளும், பாடசாலை உபகரணங்களும் ஒன்பதாம் திகதி வழங்கப்படவுள்ளது. தலா ரூபா 5 இலட்சம் பெறுமதியான சுமார் 100- நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுப்பதற்கான ஆயத்த வேலைகளை ஆரம்பிப்பதற்காகவும் இங்கு வருகை தரவுள்ளதாக தெரிவித்ததோடு, 35 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய இரண்டு பவுசர்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்டுத் தற்காலிக வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கு நீர் வழங்கி வருவதாகவும், உடனடி நிவாரணப் பொருட்கள், மருத்துவ சேவைகள் என்பன வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (20)

# முல்லையில் சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு இலகு கடன் வழங்கல் ஆரம்பம்

(முல்லை)

இலங்கை வங்கி சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு ஒருவருடம் வட்டியில்லாமல் ஒருவருடத்திற்கு பிற்பாடு ஆறு வீதமான வட்டி அறவீட்டுடன் இலகு கடன் வழங்க ஆரம்பித்துள்ளது. கைத்தொழில், வியாபாரம், கடற்றொழில் போன்றவற்றிற்கு இந்தக் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை உதவி அரசாங்க அதிபர் உறுதிப்படுத்தி தரும்படியும் ஒரு இலட்சத்திற்கு குறைவான தொகைக்கு உறவினரும் சாட்சிக் கையொப்பம் இடமுடியும் எனவும், அதற்கு மேற்பட்ட நிதியினை பெறுவதனால் அரச உத்தியோகத்தர்களின் கையொப்பம் சாட்சியாக இடப்படவேண்டும் என்றும், இதற்கான படிவங்களை, புதுக்குடியிருப்பில் இயங்கி வரும் இலங்கை வங்கிக்கிளையின் முகாமையாளர் மயில்வா கனத்திடம் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் மாவட்ட அரச அதிபருடனான கலந்துரையாடலில் வங்கி முகாமையாளர் தெரிவித் தார்.

மேலும் தெரிவிக்கையில்; பாதிக்கப்பட்ட அவர்களின் தொழிலினை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடனேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு வைப்பு இல்லாதவர்களும் தற்போது புதிய கணக்குகளை ஆரம்பித்து வருகின்றார்கள் எனக் கூறினார். கே. பாலசுப்பிரமணியம் (உதவிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), வே.ஐயம்பெருமாள் (உதவிப் பொது முகாமையாளர் வவுனியா) ஆகியோர் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஆடுகள் வழங்கல்

(முல்லை)

பெண்கள் அபிவிருத்தி நிறுவனமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து அண்மையில் முள்ளியவளை கிழக்குக் கிராம அலுவலர் பிரிவில் 15 பயனாளிகளுக்கு ஒருவருக்கு இரண்டு ஆடுகள் வீதம் வழங்கியுள்ளன.

இதில் முல்லை மாவட்ட கால் நடை வைத்தியர் த.பொ.மே.நிறுவன முள்ளியவளைப் பிரதேச இணைப்பாளர் ஆ.றொபேட், பெ.அ. நிறுவனப் பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துப் பரிமாற்றமும் ஆடுவளர்ப்புத் தொடர்பான விளக்கமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# பால் சேகரிப்பு

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

முள்ளியவளைப் பிரதேச த.பொ.மே. நிறுவன இணைப்பாளர் றொபேட் இதனைத் தெரிவித்தார். கால் நடை வளர்ப்பவர்கள் பாலை வழங்க விரும்பினால் முள்ளியவளை கமநல அபிவிருத்தி திணைக்களத்திலுள்ள த.பொ.மே. நிறுவன பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பயன்பெறு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (20)



பிரிவினைக்கெதிரான சட்டமூலம் சீன நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து சீனாவுக்கெதிராக தாய்வானில் நேற்று நடைபெற்ற மக்கள் பேரணி.

# சீனாவிடமிருந்து தாய்வானைப் பிரிக்க ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## - சீனப் பிரதமர் அறிவிப்பு

(பீஜிங்)

**சீனாவிடமிருந்து தாய்வானைப் பிரிக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். பிரிவினைத் தடுப்புச் சட்ட முன் வரைவும், தேசிய மக்கள் காங்கிரஸில் நிறைவேற்றப்படும் என சீனப் பிரதமர் வென்ஜியாபா சீன நாடாளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரஸ் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது அறிவித்துள்ளார்.**

சீன நாடாளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரசின் 10 நாள் கூட்டத் தொடர் சீனத் தலைநகர் பீஜிங்கில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது. அதில் சீனப் பிரதமர் வென் ஜியாபா உரையாற்றும்போது நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள பிரிவினைத் தடுப்புச் சட்ட முன்வரைவு தாய் நாட்டுடன் தாய்வான் இணைவதை, நாட்டின் அரசுரிமையும், ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படுவதை விரும்பும் சீன மக்களின் உறுதிப் பாட்டை எடுத்துக் காட்டுவதாக இருக்கும். எந்த வழியிலாவது, எந்தப் பெயரிலாவது தாய்வானைச் சீனாவிடமிருந்து பிரிக்க பிரிவினைவாத சக்திகள் முயற்சி செய்தால் அதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அமைதி வழியில் ஒன்றிணைதல் ஒரேநாடு இரு அமைப்புகள், தாய்வான் நீரிணையின் இருபுறத்திலும் அமைதியைப் பாதுகாத்தல், பொருளாதார, கலாசார பரிவர்த்தனைகளையும், உறவுகளையும் வளர்த்தல் என்ற அடிப்படையில் கோட்பாடுகளைப் பின்பற்றுவோம் என்றார் வென் ஜியாபா. பிரிவினைத் தடுப்புச் சட்ட முன்வரைவு சீன நாடாளுமன்றத்தில் கூட்டத் தொடரின் நிறைவு நாளான மார்ச் 14ஆம் திகதி நிறைவேற்றப் படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சீனாவின் இந் நடவடிக்கையை எதிர்த்து தாய்வானில் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

# நேபாளத்தில் அரச அலுவலகங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## - சர்வதேச உதவியைக் கோருகிறது நேபாள அரசு

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அரச அலுவலகங்கள் மீது நேற்றுமுன்தினம் குண்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் பல கட்டடங்கள் தகர்ந்துள்ளன.

நேபாளத்தில் அரசாங்கத்துக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தி வருகின்றார்கள். இந்த நிலையில் அர்காக்காசி மாவட்டத் தலைநகரான சாத்காரிக் நகருக்குள் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் நேற்று முன்தினம் புகுந்தனர். இது காத்மண்டுவிலிருந்து 450 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது. முதலில் அங்குள்ள இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தினர். அதன் பிறகு அரசாங்க அலுவலகங்கள் மீது சரமாரியாக வெடிகுண்டுகளை வீசினார்கள். இதில், தபால் அலுவலகம், கல்வித்துறை அலுவலகம் உட்பட ஏழு அலுவலகங்கள் இடிந்து சேதமடைந்தன. அருகிலிருந்த தனியாருக்குச் சொந்தமான மேலும் இரண்டு கட்டடங்களும் சேதமானது. இராணுவத்தினரும், பொலிசாரும் விரைந்து சென்று தீவிரவாதிகளைச் சுற்றிவளைக்க முயன்றனர். அப்போது இருதரப்பினரிடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. பின்னர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

இந்தச் சண்டையில் உயிர்சேதம் எதுவும் இல்லை. ஆனாலும் பொலிஸ்காரரின் மனைவி குண்டு பாய்ந்து காயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டார்.

நேபாளத்தில் அமைதி நிலவ சர்வதேச சமுதாயம் உதவிட வேண்டுமென்று நேபாள இடைக்கால அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. மந்திரிசபை துணைத் தலைவரான கிர்த்திநிதி பிஸ்தா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

# புகைப் பழக்கத்தை நிறுத்தினால் ஆயுள் நீடிக்கும்

இங்கிலாந்து புற்றுநோய் அறக்கட்டளை புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு எச்சரிக்கையுடன் கூடிய ஒரு ஆறுதல் தகவலை வெளியிட்டுள்ளது.

புகைப்பிடிக்கும் பழக்கத்தைத் தொடர்ந்தால் ஆயுளில் 10ஆண்டு குறையும் என்றும், அதேநேரத்தில் அதனை இடையில் கைவிட்டால் வாழ்நாள் அதிகரிக்குமாம். அதாவது புகைப்பிடிக்கும் பழக்கத்தை 30 வயதில் கைவிட்டால் 10ஆண்டுகள் ஆயுள் நீடிக்கும் என்று கூறுகிறது. 60வயது என்றால் 3 ஆண்டும்,50 வயது என்றால் 6 ஆண்டும்,40 வயது என்றால் 9 ஆண்டும் ஆயுள் நீடிக்குமாம்.

இங்கிலாந்தில் புகைப்பிடிக்கும் பழக்கத்தால் கடந்த 50 ஆண்டுகளில் 63 லட்சம்பேர் இறந்துள்ளது தெரிந்ததே. இது லண்டன் நகர சனத்தொகைக்கு சமமானது. இவர்களில் 16 சதவீதம் பேர் பெண்கள் என்பது மற்றொரு அதிர்ச்சித் தகவலாகும்.



லெபனானிலிருந்து சிரியப் படைகள் விலக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் பெய்ரூட்டில் சிரிய இராணுவ முகாம் ஒன்றில் கவச வாகனம் ஒன்றைப் பழுதுபார்க்கும் சிரிய இராணுவத்தினர்.

# நோர்வே நாட்டு எண்ணெய்க் கப்பல் தீப்பற்றி எரிகிறது மாலுமிகள் காப்பாற்றப்பட்டனர்

(ஒஸ்லோ)

நோர்வே நாட்டைச் சேர்ந்த 550 அடி நீள எண்ணெய்க் கப்பல் கடலில் தீப்பற்றி எரிந்து கொண்டு இருக்கிறது. அதிலிருந்த 28 மாலுமிகள் உலங்குவானூர்தி மூலம் மீட்கப்பட்டுள்ளனர்.

நோர்வே நாட்டைச் சேர்ந்த ஜோர்டு சேம்பியன் என்ற எண்ணெய்க் கப்பல் நோர்வே நாட்டின் கரையிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில கடலில் நங்கூரமிட்டிருந்த போது இயந்திரத்தில் திடீரென்று தீப் பிடித்துக் கொண்டது. தீ மளமள வென்று பரவி கப்பல் முழுவதும் எரியத் தொடங்கியது அபாய அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து அதிலிருந்த 28 மாலுமிகளும் உலங்குவானூர்தி மூலம் மீட்கப்பட்டனர். அந்தக் கப்பலில் அதன் உப யோகத்துக்காக 800 தொன் எண்ணெய் மட்டும் இருந்தது.

ஆனாலும் இந்த 800 தொன் எண்ணெயும் கப்பல் தீயினால் இரண்டாகப் பிளந்தால் கடலில் கலக்க வாய்ப்புள்ளது. அந்த எண்ணெய்க் கப்பல் நிற்கும் இடம் அருகே கோடை காலத்தை கழிக்க சுற்றுலாப் பயணிகள் வரும் குட்டித்தீவுகள் பலவுள்ளன.

எண்ணெய்க் கப்பலைச் சுற்றி கடலோர காவற்படைக் கப்பல்கள் நிற்கின்றன. எண்ணெய்க் கப்பலில் பிடித்த தீயை அணைக்கவும், அதிலுள்ள எண்ணெய் கடலில் கலக்காது தடுக்கவும் முயற்சி நடக்கிறது.

# இஸ்ரேல், பலஸ்தீனத்திற்கு ஐ.நா.பொதுச்செயலாளர் பயணம்

(வோஷிங்டன்)

ஐ.நா.பொதுச்செயலாளர் கொபிஅனான் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு விஜயம்செய்யத் தீர்மானித்திருக்கிறார். வருகிற 15.16 ஆம் திகதிகளில் அவர் சுற்றுப் பயணம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கு ஆசிய அமைதித் திட்டம் குறித்து அவர் விவாதிப்பார் என்றும் தெரிகிறது.

இந்த விஜயத்தின் போது பலஸ்தீன சனாதிபதி முகமுத்அப்பாஸ் மற்றும் இஸ்ரேலிய அதிகாரிகளை. சந்தித்துப் பேசுவார். அத்தோடு பலஸ்தீனத்தில் அருங்காட்சியகம் ஒன்றையும் கொபிஅனான் திறந்து வைக்கவுள்ளார். சுமார் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு கொபிஅனான் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது.




முன்னாள் ஈராக்கிய அரசாங்கத்தின் பழுதடைந்த போர் விமானமொன்று ஈராக்கிலுள்ள அமெரிக்கக் கடற்படை யின் விமானப்படைத் தளத்தில் நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

# பெண் விஞ்ஞானிகள் ஐவருக்கு யுனெஸ்கோ விருது

(பரிஸ்)

2005 ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோவின் பெண்களுக்கான அறிவியல் விருது இயற்பியல் துறையைச் சேர்ந்த 5 பெண் விஞ்ஞானிகளுக்கு வழங்கப்படுகிறது.

சோராபென் லக்தர் (டுனீசியா), பெலிடா கொய்லர் (பிரேசில்), மரியம் சராசிக் (அமெரிக்கா), பியூமிகோ யோனேசவா (ஜப்பான்),டாமிகின் லாங்கீவன் (பிரான்ஸ்) ஆகியோர் இந்த விருதைப் பெறுகிறார்கள் இவர்களுக்கு ரூ. 45 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படும்.

அறிவியல் துறையில் அதிலும் பருப்பொருள் அறிவியல் துறையில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக உள்ளது. இந்த நிலையில் 'யுனெஸ்கோ விருது' வழங்கப்படுவதன் மூலம் இந்த இடைவெளி குறையும். அத்துடன் சாதனை படைக்கும் பெண் விஞ்ஞானிகளுக்கு இது ஊக்கம் அளிப்பதாக அமையும் என்று யுனெஸ்கோ கூறியுள்ளது.

# லெபனானிலிருந்து ஒரு தொகுதி படைகளை வாபஸ்பெற சிரியா இணக்கம்

கடந்த ஒருவாரததிற்கும் மேலாக லெபனானிலிருந்து சிரியாப்படைகளை வெளியேற்றுமாறு கோரி லெபனானில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களையடுத்து அங்கிருந்து தமது படைகளை பகுதி அளவில் வாபஸ் பெற சிரியா இணங்கியுள்ளது. வாபஸ் பெறும் படையினர் சிரியா - லெபனான் எல்லையில் சேவையிலீடுபடுவர் என சிரியா நாட்டு சனாதிபதி தெரிவித்துள்ளார். இதேவேளை லெபனானிலுள்ள 15 ஆயி ரம் சிரியாப்படையினரும் வாபஸ் பெறப்படவேண்டும் என்று லெபனான் எதிர்க்கட்சியினர் தொடர் போராட்டங்ளை நடத்தி வந்ததையடுத்து சிரியா இந்த முடிவை எடுத்துள்ளது. அமெரிக்கா பிரிட்டன்,பிரான்ஸ், நாடுகளும் சிரியப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று கோரியுள்ளன.

# எவரையும் இழக்கக்கூடாது என்றிருந்த என்கையிலேயே ஒரு தாயின் உயிர் பிரிந்தது

## முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

**கர்ப்பிணித்தாய்மாரினதும், சிறுவர்களினதும் நிலைதான் மிகவும் மோசமாக இருந்தது. யார் தப்புவார்கள், யார் இறப்பார்கள் என்பது கூட சந்தேகமாகத்தான் இருந்தது என்றாலும், எல்லோரையுமே காப்பாற்றிவிட வேண்டும் என்ற துடிப்போடுதான் எங்கள் மருத்துவப்பணியை செய்துகொண்டிருந்தோம். பிற்பகல் நாலுமணிவரை முப்பது வரையான கர்ப்பிணித்தாய்மாரையும், பதினெட்டுக்கும் அதிகமான சிறுவர்களையுமாக நூற்றி எண்பது பேருக்கு மேல் காப்பாற்றிவிட்டோம். ஒவ்வொரு கேசையும் காப்பாற்றிவிடவேணும் என்ற தவிப்போடு நின்ற எங்கள் மனதை உடைத்த மாதிரி இளம்தாய் ஒருவர் என் கையிலேயே உயிர் துறந்துபோனார். என்று தனது உயிர்காப்பு அனுபவத்தில் நிகழ்ந்த துயரத்தைப் பகிர்ந்தார் தமிழீழ மருத்துவப்பிரிவின் போராளி மருத்துவர் கதிரவன். அவர் பகிர்ந்தவை உங்களுக்காக...**

அ.லோகீசன்

அப்படி வந்த உழவு இயந்தி ரங்களில் வந்தவர்களில் பலரின் நிலை மோசமாக இருந்தது. உயிர் இருந்தும் செத்தவர்கள் மாதிரி இருந்தார்கள். அந்தளவுக்கு சீரிய சாய் இருந்தார்கள். அவர்கள் எல் லாரையும் தீவிர சிகிச்சைக்குட்படுத்தி ஓரளவுக்கு இயல்பான நிலைக்குக் கொண்டு வந்து வைத்தியசாலைக்கு அனுப்பினோம்.

அடுத்தபடியாக கால், கை போன்ற எலும்புகள் முறிவடைந்தும், கழன்றும் கருக்கு மட்டைகள், முட்கம்பிகள்,தடிகள் போன்றவற்றால் கிழிக்கப்பட்ட நிலையிலும், மண்டை, முகம் என்பவற்றில் பெரும் உடைவுகள்,கிழிவுகள் ஏற்பட்ட நிலையில் இரத்தம் ஓடியபடியும் பலர் வந்திருந்தார்கள். சிலரது காயங்களால் இரத்தம் முழுமையாக வெளியேறி அவர்கள் வெளிறிப்போய் இருந்தார்கள.

இப்படியாக நாங்கள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறான சம்பவங்களே நடந்துகொண்டிருந்தன. அனைவருக்குமான முதல் கட்ட வைத்திய உதவிகளைச் செய்து, மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிக்கொண்டிருந்தோம்.

ஒருவாறு வட்டுவாகல் பாலத்தில் உயர்ந்திருந்த நீர்மட்டம் குறைவடைந்து கொண்டிருக்க, பாலம் செம்மைப்படுத்தும் வேலையும் நிறைவடைந்துவிட்டது.

உடனடியாகவே நாங்கள் எங்களது வாகனத்தில் மருத்துவப் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு பாலத்தைத் தாண்டி முல்லைத்தீவு நகருக்குள் போய்விட்டோம்.

### பகுதி-35

அங்கபோய் பார்த்தவுடன தான் தெரிஞ்சுது சனத்தின்ர நிலைமை எப்படி எண்டுற விசயம். காயக்காரர் அளவு கணக்கில்லாமல் இருந்தினம். யாருக்கு வைத்தியம் செய்வது எண்டுறதே தெரியாமல் திண்டாடவேண்டியநிலை. அந்தளவுக்கு நீரில் மூழ்கியவர்களும், மரங்கள், கட்டடங்களுடன் மோதுண்டு உடல் முறிவடைந்தவர்களும், உடல் தசைகள் கிழிவடைந்தவர்களும் என அளவு கணக்கில்லாமல் வந்து குவிந்து கொண்டிருந்தனர்.

சீரியசான நிலையில் தான் பலர் இருந்தார்கள். இப்படியான நிலை வரும் என்பதைக் கருத்திற்கொண்டு இரண்டாவது தடவையாகப் போய் மருத்துவ உபகரணங்களை எடுத்துவரும்போது எங்கள் மருத்துவ முகாமில் இருந்த தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமான ஒட்சிசன் சிலிண்டர்கள் மற்றும் ...ருட்களை ஏற்றிக்கொண்டு வந்ததால் ஓரளவுக்கு நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருந்தது.

கர்ப்பிணித் தாய்மாரும், சின்னப் பிள்ளைகளும் தண்ணீரில் மூழ்கி அடிபட்டு மோசமான நிலையில் வந்தார்கள். வட்டுவாகல் பாலத்தடியில் நாங்கள் கையாண்ட கர்ப்பிணித் தாய்மாரை விட இங்கு வந்தவர்கள்தான் மிகமோசமாக இருந்தார்கள்.

குழந்தைகளுக்கு எந்த சின்னத் தாக்கத்தையும் எதிர்த்து நிற்கும் தன்மை இல்லை. கர்ப்பிணித்தாய்மாருக்கு வயிற்றில் குழந்தை இருப்பதால் ஒட்சிசன் சரியான அளவில இரத்தத்தோட சேர்ந்து போய்க் கொண்டிருக்கவேணும். அதில ஏதாவது குறைவடைந்தால் வயிற்றுக்குள் இருக்கிற குழந்தையின் நிலை மோசமாகிவிடும்.



அப்படியிருக்கக் கடலுடன் அடிபடுத் தப்பிவந்த சிறுவர்களும், கர்ப்பிணித் தாய்மாரும் கடற் தண்ணியைக் குடிச்சு மோசமான நிலையில் இருந்தார்கள்.முப்பதுக்கும் அதிகமான கர்ப்பிணித் தாய்மாருக்கு நான் சிகிச்சை அளித்திருந்தேன். அத்தனை பேரும் சீரியசான நிலையில் வந்தினம்.

அப்படி வந்தவர்களில் மோசமான நிலையில் ஒரு நிறைமாதக் கர்ப்பிணித்தாய் மூச்சுத்திணறியபடி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். அவர் என் கைக்கு வரும் போது மயக்கமடைந்து எந்தநேரமும் சுவாசம் தடைப்படலாம் என்ற நிலையில்தான் இருந்தார்.அவருக்கு மூச்சுத் திணறிக்கொண்டிருந்தது.

அந்தத் தாயின் உடலைத் தட்டிப்பார்த்தேன். எந்த உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை. அவரின் உடல் நீலம்பாரித்துக் கொண்டிருந்தது.அவரின் குருதியில் எந்தளவு ஒட்சிசன் இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக எஸ்.பி. ஓ.ரூ மொனிற்றர் என்று சொல்லுகிற மொனிற்றரைப் போட்டுப் பார்த்தேன். குருதியில் ஒட்சிசனின் அளவு பயங்கரமாய்க் குறைந்து போய் இருந்தது.

சாதாரணமாக ஒரு மனிதருக்குத் தொண்ணூற்று எட்டு அல்லது நூறு வீதத்தில்தான் இருக்கும் அதைவிடக் குறையாது. முட்டு வருத்தக்காரருக்குக்கூட தொண்ணூற்றைந்தைவிடக் குறையாது. தொண்ணூறைவிடக் குறையும் எண்டாலே சிக்கலான நிலைதான். எண்பதுக்கு வந்தால் சீரியசான நிலைதான்.

ஆனால் இந்தத் தாயின் உடல் குளிர்ந்து போய் விறைப்படைந்து வெளிறிய நிலையில் பரிதாபமாக இருந்தது. இவரின் குருதியில் ஒட்சிசனின் அளவு எண்பதுக்கும் எண்பத்தைந்துக்கும் இடையில் இருந்தது எப்படியும் இவரைக் காப்பாற்றிவிட வேண்டும் என்பதுதான் எனது உறுதியான முடிவாக இருந்தது. அதற்காகக் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தேன்.

சேறுகஞ்சல்கள் அடங்கிய கனக்கத்தண்ணி குடிச்சிட்டா. அவரது இரைப்பையுக்குள்ளயும் சுவாசப் பைக்குள்ளயும் நிறையத் தண்ணி இருந்தது.

இப்பிடிருக்க நல்ல செறிவான நிலையில் ஒட்சிசனைச் செற்பண்ணி ஒட்சிசன் அளவு நூறுக்கு வரும்வரை விட்டுட்டு வேறு ஊசியள் எல்லாம் போட்டம். கடல் தண்ணியோட கிருமியள் எல்லாம் போயிருக்கும். அதாலஅன்றி பயாட்டிக் ஊசியும் போட்டம்.

கொஞ்ச நேரத்தில அந்த அம்மாவுக்கு உணர்வுவர வெளிக்கிட்டுது. மெதுமெதுவா அசைவுகள் வந்தது. ஆனாலும் என்ன நடந்தது? தான் ஏன் இப்பிடி இருக்கிறன்? எண்டுறதே தெரியாமல் இருந்தா. அதால நடந்த சம்பவத்தைச் சொல்லி அவாவை ஆறுதல்படுத்தி உங்களுக்கு ஒண்டுமில்லை. உங்களைக் காப்பாற்றிட் டம். நல்ல வடி வாய் சுவா சிக்க வேணும்.



உங்களுக்குப் பிரயோசனம் இல்லாட்டிலும் வயித்துக்குள்ள இருக்கிற குழந் தைக்குத் தேவை. அப்படிச் செய்யாட்டில் குழந்தைக் குப் பாதிப்பு வரும் எண்டு சொல்லி அவாவை சுவாசிக்க வைச்சம்.

இதுவரையும் ஏனோ தானோ எண்டு மூச்சு விட்டுக்கொண்டிருந்த அம்மா இப்ப கஷ்ரப்பட்டு மூச்சுவிட வெளிக்கிட்டுட்டா. நாங்கள் இதுவரையும் செய்த வைத்தியத்தைவிட அவாவுக்கு பிள்ளை யின்ர நிலைமையைச் சொன்ன உடன சடுதியாய் தேற வெளிக்கிட்டுட்டா.

ஆபத்தான நிலையில் இருந்து திரும்பிட்டா எண்டுற அளவுக்கு வந்த உடன தனியாக ஒரு வாகனத்தில ஏத்தி வைத்தியசாலைக்கு அனுப்பிவிட்டுட்டம்.

எந்த சீரியசான கேசோடையும் கனநேரம் மினக்கட ஏலாமல் இருந்தது. இந்த அம்மாவோடையும் ஐஞ்சு நிமிசம்தான் மினக்கட்டிருப்பம். அந்தளவுக்கு எங்கள் வேலையை விரைவுபடுத்தவேண்டிய தேவை இருந்தது.

இப்படித்தான் ஒவ்வொரு கர்ப்பிணித்தாய்மாரும் வந்தினம். பரிதாபமாக இருந்தது. உடனடியாக என்ன செய்யமுடியுமோ அதை நாங்கள் செய்து முடித்தோம்.

அடுத்தபடியாகக் குழந்தைகளின் நிலை அதுவும் மோசமாய்த்தான் இருந்தது. நான் மட்டும் பதினெட்டுக்கும் அதிகமான சின்னக் குழந்தைகளுக்கு உடனடி மருத்துவம் செய்திருப்பேன். இப்படியான நெருக்கடியான கட்டத்தை நாங்கள் ஒரு போதும் கண்டதேயில்லை.

இப்படியாகப் பிற்பகல் நாலு மணி வரையும் முல்லைத்தீவில் தான் நின்றோம். சில நேரம் ஒரு கேசும் வராது சிலவேளை ஒருதொகையாக வந்து குவிந்திருக்கும்.

சீரியசான ஆட்களுக்கு மட்டும் தான் நாங்கள் வைத்தியம் செய்யவில்லை. எல்லோருக்குமே நாங்கள் வைத்தியம் செய்தோம்.

கால், கை முறிந்தவர்களுக்கு மட்டைவைத்துக்கட்டுவது, ஊசிபோடுவது, மருந்துகட்டுவது போன்றன முதல் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் கடுமையான கேசுகள் வரை அனைத்தையுமே நாங்கள் கையாண்டோம்.

சம்பவ இடத்துக்கு மருத்துவப்பணி செய்வதற்காக மருத்துவப் பிரிவின் அனைத்து வளங்களுமே நகர்த்தப்பட்டிருந்தது. மருத்துவப் போராளிகள் முழுமூச்சுடன் தமது பணிகளை மேற்கொண்டிருந்தனர். அன்று அனர்த்தம் நிகழ்ந்த சிறிது நேரத்தில் நாங்கள் அந்தப் பகுதிக்குப் போயிருக்காவிட்டால் பெருமளவானவர்களை இழந்திருப்போம்.

ஒவ்வொரு இடத்தில் இருந்தும் இரண்டு பேர் இருக்கிறார்கள், மூன்று பேர் இருக்கிறார்கள் என்ற அறிவித்தல் வந்துகொண்டிருந்தது. அந்த அறிவித்தல் வந்தவுடன் எங்களது வாகனத்தையும் கொண்டு போய் அந்த இடத்திலேயே வைத்து மருத்துவம் செய்தோம்.

இப்படியாக ஒரு மணிவரைதான் காயக்காரர் வருகின்ற அளவு அதிகமாய் இருந்தது. அதன்பிறகு ஒன்று இரண்டு என்றுதான் நாலு மணிவரை வந்தது. அதன்பிறகு எவரும் வரவில்லை. அதனால் ஒரு குறிப்பிட்டவர்களைத் தவிர மீதிப் பேர் அனைவரும் வைத்தியசாலைகளில் நிலவிய நெருக்கடியைத் தீர்ப்பதற்காகச் சென்றுவிட்டோம்.

யுத்த களங்கள் பலவற்றில் மருத்துவப்பணி செய்திருக்கிறோம். ஆனால் இப்படியான நெருக்கடிகள் எதையும் சந்திக்கவேயில்லை.

முல்லைத்தீவில் நாங்கள் செய்த மருத்துவப் பணிகளில் நூற்றி எண்பதுக்கும் அதிகமானவர்களைக் கையாண்டிருப்போம். அத்தனை பேருக்குள்ளும் சிரியசான நிலையில் வந்தவர்கள் தான் அதிகம் அவர்களில் அனைவரையும் காப்பாற்றி விடவேண்டும் என்ற துடிப்பில்தான் பணியாற்றினோம். ஆனால் எனது கையில் ஒரு தாயின் உயிர்பிரிந்து விட்டது. அதுதான் வேதனையாக இருக்கிறது என்று தனது உயிர் காப்பு அனுபவத்தைச் சொல்லி முடித்தார் அந்தப்போராளி மருத்துவர்.

*சுனாமி அலைகளின் சிதைவுகளில் சிக்கி இருந்தவர்களை மீட்கின்ற பணி ஒரு சில நிமிடங்களில் ஆரம்பமாகி இருந்து அந்தப்பணியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அனைத்துப்படையணிகளும் ஈடுபட்டிருந்தன. இந்தநிலையில் மேலதிகமாக விசேட படையணியாகிய உந்துருளிப் படைப்பிரிவின் உதவி நாடப்பட்டது அந்தப்படையணி முல்லைத்தீவின் சிதைபாடுகளுக்குள் எப்படித்தமது உந்துருளிகளில் சென்று மீட்பு நடவடிக்கைகளை செய்தார்கள் என அந்த நடவடிக்கையில் ஈடுபட்ட போராளி ஒருவர் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் அவர் பகிர்ந்தவை அடுத்த பகுதியில்.*

தொடரும்...

## கடந்த வாரத்தில்

## 24.02.2005-02.03.2005

### 24.

➡ ஈராக்கின் ரிக்றிட்ரில் பொலிஸ் தலைமையகக் கட்டடம் ஒன்றில் கார்க் குண்டு வெடித்ததில் 15 பேர் பலி; 22 பேர் காயம்.



➡ சூடானின் தெற்கில் உள்ள ஜபா எனும் மாநிலத்தில் இயங்கிய இராணுவப் பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான ஆயுதக்களஞ்சியசாலை ஒன்று வெடித்துச் சிதறியதில் 24 பேர் பலி; 30 பேர் காயமடைந்தனர்.

➡ இந்தியா சென்றுள்ள ஆப்கானிஸ்தான் சனாதிபதி ஹமீர்ஹர்சாய் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினார்.

### 25

➡ சீனாவின் தெற்கு குவாங்கோ மாகாணத்தில் பயணிகள் பேருந்து ஒன்று பள்ளத்தினுள் விழுந்ததினாலும்; மற்றும் மொரு பேருந்து,வான் ஒன்றுடன் மோதியதினாலும் 27 பேர் பலி; 49 பேர் காயம்.

➡ கொங்கோவின் கபே.பட்டணத்திற்கு அண்மையில் ஐ.நா.அமைதிப் படையினர் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் ஐ.நா.அமைதிப் படையினர் ஒன்பது பேர் பலி.


➡ நேபாள நாட்டிற்கு பிரிட்டன், இந்தியா வழங்கிவந்த இராணுவ உதவிகள் நிறுத்தம்.

➡ 2005 ஆம் ஆண்டுக்கான திருமதி உலக அழகிப் போட்டி இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் ஆம்பி பள்ளத்தாக்கில் இடம்பெற்றது. இதில் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த சீமாபக்கர் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.


### 26.

தாய்வான் தாய் சங்கநகர் மையப் பகுதியில் 23 மாடிகளைக் கொண்ட பிரமாண்ட கோபுரத்தின் உச்சியில் உள்ள ஹோட்டலில் மாணவர்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 4 பேர் உடல் கருகிப் பலி ; 20 பேர் காயம்.

➡ இஸ்ரேலின் தலைநகர் டெல்




அவிவில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 4 பேர் பலி; 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.




### 27.

➡ இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஐந்து பலஸ்தீனியர்கள் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

➡ ஈரான் அணுஉலை ஒன்றிற்கான எரிபொருளை வழங்கும் ஒப்பந்தமொன்றில் அமெரிக்காவின் எதிர்ப்பின் மத்தியிலும் ரஷ்யா கைச்சாத்திட்டது. இதன் மூலம் ஈரான் புஸ்கேர் துறைமுகத்திலுள்ள அணு உலை செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




➡ இந்தியத் தயாரிப்பான ஆகாஷ் ஏவுகணை ஆறாவது தடவையாக பரிசோதிக்கப்பட்டது.



➡ இந்தியாவைச் சேர்ந்த ஷாஜகான் என்னும் நபர் சவுதியரேபியா நாட்டுக்குள் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுப் பின்னர் நிரபராதி எனக் கண்டறியப்பட்டு மரண தண்டனையிலிருந்து உயிர் தப்பினார். நண்பர் ஒருவர் அன்பளிப்புச் செய்த உடுப்புப் பொதியிலே இப்போதைப் பொருள் இருந்ததாகவும் இவர் இதனைப் பிரித்துப் பார்க்காததனாலும் இவ்வாறு நேரிட்டதாக எடுத்துக் கூறியதன் பின்னர் இவருக்கு இம் மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

➡ ஏழாவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா ஹொலிவூட்டில் இடம்பெற்றது. இதில் ஈஸ்ட்வுட் இயக்கிய "மில்லியன் டொலர் பேபி" படம் சிறந்தபடமாகத் தேர்வு செய்யப்பட்டது.



➡ நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் அம்லக்குஞ்ச், சோலோக்குட்டி ஆகிய இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 16 பேர் பலி.

➡ வட ஈராக் நகரான மொசூலில் துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் நான்கு பேர் பலி; இருவர் காயம்.



➡ இந்தியாவின் பீகார், அரியானா, ஜார்க்கண்ட் மாநிலங்களில் இடம்பெற்ற சட்டசபைத் தேர்தலில் 90 உறுப்பினர்களைக் கொண்ட அரியானா மாநில சட்டசபையில் 68 ஆசனங்களை இந்தியத் தேசியக் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இம் மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியமைத்துள்ளது.

### 28

➡ ஈராக்கின் ஹில்லா பகுதியிலுள்ள மருத்துவமையத்தின் வெளிப்பகுதியில் சக்தி வாய்ந்த கார்க்குண்டு வெடித்ததில் 110 பேர் பலி;133 பேர் படுகாயமடைந்தனர்.



➡ நேபாளத்தின் பொகாரா நகருக்கருகில் பயணிகள் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் பலி ;15 பேர் காயம்.

### 01.

➡ லெபனானில் எதிர்க்கட்சிகளும், பொது அமைப்புக்களும் சிரிய அரசாங்கத்திற்கெதிராக தொடர்ச்சியாக மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையடுத்து சிரிய ஆதரவு அரசாங்கம் பதவி விலகியுள்ளது.



➡ இந்தோனேஷியாவின் பாலித்தீவுப் பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.0 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

➡ வட- கிழக்கு கொங்கோவில் நிலை கொண்டுள்ள ஐ.நா. அமைதிப்படையைச் சேர்ந்த பாகிஸ்தான் வீரர்களுக்கும், தீவிரவாதிகளுக்குமிடையில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 55 தீவிரவாதிகள் பலி.

### 02

➡ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழக்குகளை விசாரித்து வந்த பாராவிஸ்



முகமது என்ற நீதிபதியும், அவரது சகோதரரான வக்கீல் ஒருவரும் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொலை.


➡ ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.5 புள்ளியாகப் பதிவாகியது.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மத்தியிலுள்ள இராணுவமுகாம் ஒன்றின் வெளிப்புறத்தில் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் 10 பேர்பலி ; 25 பேர் காயம்.



➡ வியட்னாமில் பறவைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபரொருவர் பலி.

➡ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள உள்துறை அமைச்சர் அலுவலகத்திற்கு அருகில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் 5 பேர் பலி; பலர் காயம்.



➡ இந்தியாவிற்குள் சட்ட விரோதமான முறையில் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒருகோடி இந்திய ரூபாய்கள் சென்னையில் பொலிசாரிடம் சிக்கியது.



# வாகரை தற்காலிக முகாம்களில் பெற்றோர் விழிப்புணர்வூட்டல் செயற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப்பிரதேசத்தில் சுனாமி பாதிப்பினால் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் தற்காலிக முகாம்களில் உள்ள முன்பள்ளிகள் தரிசிப்பும், பெற்றோர் விழிப்புணர்வு அதிகரித்தல் செயற்பாடும் கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய முன்பள்ளி, அபிவிருத்தி இணைப்பாளர்கள் இவ்வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். த.பு.க ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் செ.பாண்டியன் வடக்கு கிழக்கு மாகாண மு.ப.க.மே. நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கா.கணேசலிங்கம் ஆகியோர் மேற்படி வேலைத்திட்டத்தை நேரில் நெறிப்படுத்தி வருகின்றனர்.

ஆரம்பத்தில் வட்டுவான், மாங்கேணி, காயாங்கேணி 2ஆம்கட்டை, வாகரை, ஊரியான்கட்டு, இடைத்தாங்கல்முகாம்கள் எட்டு முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர்களினால் தரிசிப்புச் செய்யப்பட்டது. மாலை 2.00 மணிக்கு மேற்படி முகாம்,முன்பள்ளி ஆசிரியர்களை இணைத்துக் கூட்டம் நடைபெற்றது.

# வந்தாறு மூலை களுவன்கேணியில் ஒருவர் சுட்டுக் கொலை

வந்தாறுமூலை களுவன்கேணி வீதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வேலுப்பிள்ளை சுரேந்திரன் (வயது-32) என்பவர் கொல்லப்பட்டுள்ளதாக இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஏறாவூர் பொலிசார் கூறுகின்றனர்.இராணுவத்துடன் இயங்கும் குழுவுடன் நெருக்கமான தொடர் புகளைக் கொண்டிருந்தார் என்று தமது விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகத், தெரிவித்த பொலிசார் இவரைச் சுட்டுக் கொன்றோரை இதுவரை அடையாளம் காணவில்லையென்றும், சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரி-56 ரக துப்பாக்கிக்குரிய வெற்றுத் தோட்டாக்கள் ஆறும் வெடிக்காத தோட்டாக்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

# பிந்திய காலபோக நெற்செய்கை; கால்நடைகளால் அழிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பிந்திய காலபோக நெற்செய்கையை கால்நடைகள் நாசம் செய்துவருகின்றன.

மழை காரணமாக காலம்பிந்தியும், அழித்து விதைப்பினை மேற் கொண்ட நெற்செய்கையே தற்போது கால்நடைகள் அழிந்து வருகின் றன. உரியவர்கள் நடவடிக்கைகள் எடுப்பதுடன் இப் பிரதேசத்திற்கு பொறுப்பான கமக்கார அமைப்புக்கள் கவனத்தில்கொண்டு விவசாயி களுக்கு உதவும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளது. (12)

# மின்பிறப்பாக்கிகள் கண்டுபிடிப்பு

திருகோணமலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் அண் மையில் காணாமற் போன 12 மின் பிறப்பாக்கிகளும் நேற்று முன்தினம் இரவு பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொலிசாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து காணி அலுவலகத்திற்குப் பின்புறமாக விறகுகளிற்குள் இவை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

இந்தியாவினால் ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணமாக வழங்கப்பட்டு களஞ்சியப்படுத் தப்பட்டிருந்த 95 ஜெனரேற்றர்களில் 12 மர்மமான முறையில் காணாமல் போயிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் உதவிக் காணி ஆணையாளர் அலுவலக எழுதுவினைஞர் மற்றும் சிற்றூழி யர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள் ளனர்.காணாமல் போன இந்த 12 மின் பிறப்பாக்கிகளும் பொலி சாரின் கண்ணில் தெரியக்கூடிய வகையில் நேற்றுமுன்தினமிரவு குறிப்பிட்ட இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதனை எடுத்தவர்களே மீண்டும் கொண்டு வந்து அந்த இடத்தில் வைத்துள் ளார்கள் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

## பழையமாணவர் சங்கத் தெரிவு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தி யாலயத்தின் பழையமாணவர் சங்கத் தெரிவு நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு பாடசாலை முதல்வர் ராஜா தலைமையில் அக வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

தலைவர் செயலாளர், உட்பட 11 அங்கத்தவர்கள் தெரிவு இடம் பெற்றது. இத் தெரிவில் 100 இற் கும் அதிமான பழையமாணவர்கள் கலந்துகொண்டனர், பாடசாலை முதல்வரின் கருத்துரையும் புதிய் செயலாளரின் நன்றியுரையும் நடைபெற்றதுடன் கூட்டம் நிறைவு பெற்றது. (19)

# 155 குடும்பங்களுக்கு குடிசைகள் கையளிப்பு

(முல்லை)

சுனாமியால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்த இரு கிராம மக்கள் நேற்று முன்தினம் தற்காலிக குடிசைகளில் குடியமர்த்தப்பட்டனர். சோபா நிறுவன நிதியுதவியில் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் அளம்பில் பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசை களில் 80 குடும்பங்கள் மாலை 3.00 மணிக்கு குடியமர்த்தப்பட்டனர்.

இதேபோன்று சிலாவத்தை தெற்கு தியோகு நகரில் மாலை 5.00 மணிக்கு கியூடெக் நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் 75 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு உடனடி நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்தக் குடியமர்த்தல் நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைமாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் மூர்த்தி, செயலணிப் பொறுப்பாளர் மாறன் கடற்புலி களின் சுனாமி நிர்மாணப் பொறுப்பாளர் க.தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். (20)

# யூரியா உரத்தின் அதிகரித்த பாவனையே நெல்விளைச்சல் பெருமளவில் பாதிக்கக் காரணம்

## - முல்லை மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் தகவல்

(விசுவமடு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவு "யூரியா" மற்றும் "நைதரசன்" உரப்பாவனையால் இந்த பெரும் போகத்தில்- நெல் உற்பத்தி பெருமளவு பாதிப் புக்குள்ளாகியுள்ளதாக உதவி விவ சாயப் பணிப்பாளர் கவலை தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; விவசாயிகள் பயிர் உற்பத்தி மேற் கொள்ளும்போது சேதனப் பச ளையை அவசியம் பயிரிடப்படும் நிலத்திற்கும் போடவேண்டிய தேவையிருக்கின்றது. பல வருடங் களாக உற்பத்திகளை தொடர்ச் சியாக மேற்கொண்டுவருவதால் நிலத்திலுள்ள பயிருக்கான போச னைகள் யாவும் குறைந்துள்ளது.

பயிருக்குத் தேவையான போச னைகள் கிடைக்காவிடில் "யூரியா" நைத்ரசன் உரத்தின் தாக்கத்தினால் பயிர்கள் அதிக வளர்ச்சியடைந்து பயிர் சாய்வதாலும், பச்சயம் அதி கரிப்பதாலும், பூச்சி நோய் தாக்கத் துக்குள்ளாகி விளைச்சலில் பெரு மளவு பாதிப்பை விவசாயிகள் எதிர் கொள்ள வேண்டிய நிலை உருவா வதால் விவசாயிகள் பயிர் உற்பத்தி யின்போது அதிக கவனம் எடுக்க வேண்டும்.

அத்தோடு விவசாயத் திணைக் கள உத்தியோகத்தர்களின் கருத் துக்களைக் கேட்டு புதிய திருத திய நவீன மயமாக்கிய பயிர் உற் பத்தியை மேற்கொண்டால் குறைந்த பரப்பளவில் கூடிய உற் பத்தியைப் பெறுவதோடு- லாபத் தையும் பெறலாம். அத்துடன் விளை நிலத்தையும் வளமாக வைத்திருக்க முடியுமென முல் லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர்- (விரிவாக்கம்) கோகு லதாசன் தெரிவித்துள்ளார். (46)

# வர்த்தகர்களுக்கான முக்கிய ஒன்றுகூடல்

(முல்லை)

முல்லைப்பிரதேச வர்த்தகர் களுக்கான முக்கிய ஒன்று கூடல் இன்று மாலை 3.30 மணிக்கு முல் லைத்தீவு மகாவித்தியாலய மண்ட பத்தில் நடைபெறவுள்ளதாக முல் லைப்பிரதேச வர்த்தக சங்கத் தலை வர் மனோ தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் தமிழீழ வைப்பகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வங்கி நடவடிக்கை பற்றி கலந்தாலோசிக்க இருப்பதால் அனைத்து வர்த்தகர்களையும் தவ றாது கலந்து கொள்ளுமாறு கேட் டுக்கொண்டுள்ளார். (20)

# மண்வளம் பேணும் கருத்தூட்டல் நிகழ்வில் விவசாயிகள் ஆர்வம்

(முல்லை)

முல்லைத்தீவு மாவட்ட விவ சாயத்திணைக்களத்தினரால் வைக் கோல் எரிப்பதைத் தடுப்போம் மண் வளத்தைப் பேணுவோம்" என்ற தலைப்பில் மண்வளம் பேணுவது தொடர்பான தெருவோரக் கருத் தூட்டல் நாடக நிகழ்வு முல்லை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நடை பெற்று வருகின்றது.

கடந்த முத்லாம் திகதி ஆரம்ப மான இந்த நிகழ்வில் முக்கிய, கருப்பொருள் நெல்அறுவடை யைத் தொடர்ந்து கிடைக்கும் வளம் மிக்க வைக்கோலை எரிப்ப தனைத் தடுப்பதும், அதன் பயன்பா டுளை எடுத்துக் கூறுவது மாகும்.

இந்தக் கருத்தூட்டல் நிகழ் வினை விவசாயத்திணைக்கள பணியாளர்கள் கலந்துகொண்டு நடாத்திவருகின்றார்கள். இந்த விழிப்பூட்டும் கருத்தரங்கில் அந்தந்தப் பகுதி விவசாயிக்ள் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான விளக்கங்களைப் பெற்று வருகின் றனர். (20)

# பேருந்துச் சேவை வேண்டும்

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் ஒட்டங்குளம் கிராமத்திற்குப் பேருந்து சேவையின்றி மக்கள் அவதிப்படுகின்றனர்.மேற்படி கிராமங்களான பூவரசங்குளம்,வினாயகபுரம் பகுதிகளில் 400 இற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

விவசாயத் தொழிலை மேற்கொண்டு வரும் மக்கள் தங்களின் விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப் படுத்தவும் ஏனைய தேவைகளுக்கும், எட்டுக் கிலோ மீற்றர் தூரம் நடந்து மல்லாவி நகர்ப் பகுதிக்கு வருகின்றனர். இவ்வாறு பாடசாலை மாணவர்கள் நோயாளர்களென நீண்ட காலமாகப் பேருந்து சேவையின்றி அவதிப்படு கின்றனர்.

துணுக்காய் பிரதேசத்தில் இருந்து ஒட்டங்குளம் கிராமத்திற்குச் செல்லும் பிரதான பாதை சீராகவுள்ளதால் பேருந்துச் சேவை விரைவில் நடத்தப்படவேண்டுமென மக்கள் கேட்கின்றனர். (24)


## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தின் வாடிக்கையாளர் கவனத்திற்கு

வாடிக்கையாளர் அட்டையில் பதிவினை மேற்கொள்ளாது வைத்திருக்கும் அனைவரும் 10-03-2005 இற்கு முன்னதாக பதிவினை மேற்கொண்டு உங்கள் பரிசினை உறுதிப்படுத்தும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.

எமது பரிசளிப்பு நிகழ்வு 20-03-2005 அன்று கிளிநொச்சி கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்.

(சி-11460) யாழ்சாலை, கிளிநொச்சி.


## முதலாம் ஆண்டு நினைவு நாள்



18.02.2004 அன்று சாவடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**திரு.இராமநாதன் அன்னலிங்கம்**

அவர்களின்

முதலாம் ஆண்டு வீட்டுக்கிரித்தியம் எதிர்வரும் 08.03.2005 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுவதுடன், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகை அம்மன் கோவிலடி,
விநாயகபுரம்,
கிளிநொச்சி. (5767)

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்.

# போதைப்பொருள் தொடர்பான வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நால்வருக்கு சிறைத்தண்டனை!

(செட்டிகுளம்)

ஹெரோயின் விற்பனை மற்றும் பாவனை தொடர்பான நான்கு வழக்குகளில் குற்றவாளிகள் எனக் காணப்பட்டவர்களில் ஒருவருக்கு 25 மாதக் கடுழியச் சிறைத்தண்டனையும், இன்னுமொருவருக்கு 15 மாதச் சிறைத்தண்டனையும், வேறு இருவருக்கு தலா நான்கு மாதச் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி எம். இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

போதை வஸ்து, கசிப்பு மற்றும் சட்டவிரோதச் செயற்பாடு தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப் பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் சிறீஸ்கந்தராசா தலைமை யிலான பொலிஸ் குழுவினரால் வவுனியா தேக்கங் காட்டுப்பகுதியில் வைத்து இவர்கள் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டு, இவர்களுக்கு எதிராக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வெவ்வேறு வழக்குகள் தொடர்பான விசாரணைகள் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

வவுனியா தேக்கங்காட்டுப்பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவருக்கு எதிரான வழக்கு விசார ணையின்போது இவர் முன்னர் ஆறு தடவைகள் இதே குற்றத்தைப் புரிந்ததை ஒப்புக்கொண்டு தண்டனை அனுபவித்துள்ளார் என்பது தெரியவந்தது. அத்துடன் ஏற்கனவே ஐந்து வருடத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாதக் கடுழியச்சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டிருந்தமையும் நீதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்டது. இந்தத் தண்டனை [illegible]கப்பட்டிருந்தபோதிலும் மீண்டும் போதைப் பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டு கருணை மனுச் செய்ததன் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையை அனுபவிக்காமல் அண்மையில் குற்றத்தண்டனைக்குள்ளாகியிருந்தார் என்பதும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் முடிவில் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாதச் சிறைத்தண்டனையுடன், தற்போதைய வழக் கிலும் குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் ஆறு மாத கடுழியச் சிறைத் தண்டனையையும், ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தத் தவறினால் மூன்றுமாதக் கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்ற நீதிமன்றத்தின் நிபந்தனைக்கமைய மொத்தமாக 15 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

இதேபகுதியைச் சேர்ந்த ரவி என்றழைக்கப்படும் விஜயசேகரா என்பவருக்கு எதிரான வழக்கில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத்தண்டனையுடன் நடப்பு வழக்கில் தண்டனையாக ஆறுமாதச் சிறைத்தண்டனையும், தண்டப்பணம் செலுத்தத்தவறியமைக்கான ஒரு மாதச் சிறைத்தண்டனையுமாக 25 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட ஹெரோயின் போதைப்பொருள் பாவித்தார்கள் என்ற குற்றத்திற்காகச் சந்தேகத்தின் பெயரில் கைதாகி குற்றத்தை ஒப்புக்கொண்ட வேறு இருவருக்கு தலா நான்கு மாதச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (21)

# புதுடில்லியில் மூன்று தீவிரவாதிகள் படையினரால் சுட்டுக் கொலை

(புதுடில்லி)

தலைநகர் புதுடில்லியில் மூன்று தீவிரவாதிகள் இந்தியப் படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தலைநகர் புதுடில்லியில் தீவிரவாதிகள் என்று சந்தேகப்படும் இரண்டுபேரைப் பொலிசார் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்தனர். அவர்கள் வழங்கிய தகவலின்படி மேற்கு டில்லியிலுள்ள உத்தம்நகரில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகப் பொலிசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டைடைப் பொலிசார் முற்றுகையிட்டனர். அப்போது வீட்டுக்குள் பதுங்கியிருந்த மூன்று தீவிரவாதிகளும் சரணடைய மறுத்து பொலிசாரை நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள். 50 நிமிட நேரம் நடந்த கடும் சண்டைக்குப் பின் தீவிரவாதிகள் மூன்று பேரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அவர்களிடமிருந்து 10 கிலோ ஆர்.டி.எக்ஸ் வெடிமருந்தும் மற்றும் மூன்று ஏ.கே. -47 இயந்திரத் துப்பாக்கிகள் போன்றவை கைப்பற்றப்பட்டன. இந்தத் தீவிரவாதிகள் மூன்று பேரும் லஷ்கர் இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது பின்னர் தெரிய வந்தது. அதில் சாம்ஸ் என அழைக்கப்படும் பிரவீஸ் பாட்னாவைச் சேர்ந்தவரும் ஷானவாஸ், பிலாவலால் என்ற இரண்டு பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். டேராடுனில் உள்ள இந்திய இராணுவ பயிற்சி மையத்தைத் தகர்க்கும் நோக்கில் அவர்கள் டில்லி வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# கருணாநிதி - இளங்கோவன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு

(சென்னை)



தி.மு.க. தலைவர் கருணாநிதியை, கோபாலபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு மத்திய அமைச்சர் ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் சந்தித்துப் பேசினார்.

சந்திப்பு முடிந்ததும், தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அதன்போது இன்றைய சந்திப்புக்குப் பிறகு இளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தை வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். இன்றைய தினம் இளங்கோவன் என்னைச் சந்தித்துப்பேசியவைகளையும், விளக்கியவைகளையும் தி.மு.கழக உயர்மட்ட செயல் திட்டக்குழு உறுப்பினர்களுக்கு நான் தெரிவிப்பேன்.

சில பத்திரிகைக்காரர்கள் போஸ்டர் ஒட்டுகிறவர்கள், வதந்திகளைப் பரப்புகின்றவர்கள் ஆகியோரின் பிரச்சாரத்திற்கு முடிவு ஏற்பட்டுவிட்டது.

இளங்கோவன்அளித்த விளக்கம் திருப்தியாக இருந்தது.

வரும் சட்டமன்றத் தேர்தலிலும் இப்போதுள்ள கூட்டணி தொடரும் எந்தப்பிரச்சினையிலும் நாங்கள் நிலை எடுத்தால் அதிலே நாங்கள் உறுதியாகவே இருப்போம்.

ஒரு சில பத்திரிகையாளர்கள் இந்தச் செய்திகளை எப்படி திரித்து வெளியிட்டாலும் பொதுமக்களுக்கு உண்மை நன்றாகத் தெரியும். இவ்வாறு கருணாநிதி கூறினார்.

இந்தச் சந்திப்புக் குறித்து இளங்கோவன் கருத்துத் தெரிவிக்கையில், எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் தலைவர் கலைஞர் அவர்களிடம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். நிலைமைகளை விளக்கினேன். இந்தப் பிரச்சினை இதோடு முடிந்துவிட்டது.

மக்கள் தங்கள் பக்கம்தான் என்று ஜெயலலிதா கூறுகிறார். மக்கள் யார் பக்கம் என்பது விரைவில் வரப்போகின்ற சட்டமன்றத் தேர்தலில் தெரியும்.

எங்கள் கூட்டணி உண்மையாகவே நீடிக்கின்றது. இந்தக்கூட்டணியை டாக்டர் கலைஞர் அவர்கள்தான் தமிழகத்திலே தலைமை தாங்கி நடத்துகிறார். என்றார்.

அண்மையில் அமைச்சர் இளங்கோவன் தி.மு.ககழகத் தலைவர் மு.கருணாநிதியை தனிப்பட்ட முறையில் விமர்சித்திருந்தார். இது குறித்துஇளங்கோவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென காங்கிரஸ் தலைமைப்பீடத்தை தி.மு. கழகம் கேட்டிருந்தது தெரிந்ததே.

## மீண்டும் புதுப்பொலிவுடன் சஞ்சிகா திரையரங்கு

*மீண்டும் புதுப்பொலிவுடன் 08.03.2005 மகாசிவராத்திரி அன்று விசேட காட்சிகளுடன் ஆரம்பமாகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.*

*முன்னர் ஏற்பட்ட தீ அனர்த்தத்தின் போது பொருட்சேதங்களைத் தவிர்ப்பதற்கு உதவி வழங்கிய வீதி ரோந்துக் காவல்துறையினர், விசுவமடுக் காவல்துறையினர், விசுவமடு இளைஞர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

விசுவமடுச் சந்தி,
விசுவமடு. (5773)

பொ.மாணிக்கவாசகர்(அன்பரசன்)
உரிமையாளர் சஞ்சிகா திரையரங்கு

## 75 பேருக்கு குளவி கொட்டியது

(ராஜ்கார்)

மத்திய பிரதேச மாநிலம் ராஜ்கார் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்துக்கு மாநில விவசாய மந்திரி பட்ரிலால் யாதவ் சென்றார். அங்கு உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் அவர் கலந்து கொண்டார்.

அப்போது குளவிகள் அங்கு ஏராளமாகப் பறந்து வந்தன. மந்திரி பட்ரிலால் யாதவ் உட்பட கிராம மக்கள் 75 பேரை அந்தக் குளவிகள் ஓட ஓட விரட்டிக் கொட்டின. இதுபற்றி தகவல் கிடைத்ததும் டாக்டர்கள் குழு விரைந்து சென்று குளவி கொட்டியவர்களுக்குத் தடுப்பூசி போட்டார்கள்.

## தடுத்து நிறுத்துவோம்

(சென்னை)

ஊடகங்களில் தமிழைக் கொச்சப்படுத்துவதைப் தடுத்து நிறுத்துவோம் என பா.ம.க நிறுவுனர் டாக்டர்.ராமதாஸ் தெரிவித்தார். சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற நூல்வெளியீட்டு விழாவில் அவர் உரையாற்றும் போது தமிழிசை, பண்ணிசையை வளர்க்க ஏழு முதல் பதினொரு பேர் கொண்ட அறிஞர்கள் குழு அமைக்கப்படும்.இவர்கள் தமிழை எப்படி வளர்ப்பது என்பது குறித்து ஒரு மாதத்தில் ஆய்வு நடத்தி முடிப்பர். இந்தக் குழு அமைப்பது குறித்து தி.மு.க தலைவர் கருணாநிதியிடம் பேசுவேன் உயிர் நாடியான தமிழ் மொழியை நாம் இழந்துவிட்டோம். தமிழுக்கு எதிரானவர்கள் சினிமாவைத் திசைதிருப்பி வேறு திசைக்கு அழைத்துச் செல்கின்றனர்.இது தமிழகத்தின் இருண்டகாலம் தமிழும் வளராது, தமிழகமும் வளராது.எனவே தமிழகத்தில் நிச்சயம் நல்லதொரு மாற்றம் வரும் என்றார் ராமதாஸ்.

## சாவு அறிவித்தல்



### திருமதி செல்வவிநாயகம் நாகம்மா

தொண்டமனாற்றைப் பிறப்பிடமாகவும்
பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி.செல்வவிநாயகம் நாகம்மா அவர்கள்
நேற்று அதிகாலை(06-03-2005) இந்தியாவில் காலமாகிவிட்டார்.
இவரது இறுதிக்கிரியைகள் நேற்று மாலை இந்தியாவில்
நடைபெற்றது. இவ்வறித்தலை உற்றார் உறவினர்
நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: மகன்
மனோஜ்(போராளி),
மருத்துவப்பிரிவு

(சி-11462)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்வவிநாயகம் நாகம்மா

06.03.2005 அன்று இயற்கை எய்திய
திருமதி செல்வவிநாயகம் நாகம்மா அவர்களின் பிரிவால்
துயருறும் டாக்டர்.பொன்னம்பலம் மருத்துவமனையின்
பணிப்பாளரான திரு.மனோஜ் அவர்களுக்கும் அவரின்
குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது இதய
அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்,வைத்தியர்கள்,
பணியாளர்கள்
டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலை,
கிளிநொச்சி,புதுக்குடியிருப்பு.

(சி-11461)

## கண்ணீர் பூக்கள்



### திருமதி. செல்வவிநாயகம்-நாகம்மா

டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையின் பணிப்பாளர் திரு. மனோஜ் அவர்களின் அன்புத் தாயார் திருமதி செல்வவிநாயகம்-நாக்ம்மா அவர்கள் 05.03.2005 அன்று (சனிக்கிழமை) இந்தியாவில் இறைபதமடைந்து விட்டார். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு, அவர்களின் துன்பத்தில் நாங்களும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**வைத்தியர்கள், பணியாளர்கள்,**
**(டா)பொ.ஞா.மருத்துவமனை,**
**புதுக்குடியிருப்பு.**

கண்ணன் மருத்துவ மனை,
தேவிபுரம்.

(சி-11545)



கிளி.மாவட்ட அணியினர்.....



வவுனியா,மட்டு.அணியினர்...

# கேணல் கிட்டு ஞாபகார்த்த கால்பந்து சுற்றுப் போட்டி

## பரபரப்பான அரையிறுதி ,இறுதிப் போட்டிகள் இன்று

கேணல் கிட்டு ஞாபகார்த்தமாக எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய கால்பந்து சுற்றுப் போட்டியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 9.00 மணியளவில் கிளி.உதயதாரகைவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச் சுடரினை மட்டக்களப்பு விளையாட்டு அணித் தலைவர் வேந்தராஜா ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கத்துடன் ஆரம்பமான முதற் போட்டியில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மருதநிலா அணியும், மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விக்கினேஸ்வரா அணியும் மோதின. இப்போட்டியில் மருதநிலா அபாரமாக ஆடி 11-0 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

அடுத்து மாலை 3.00 மணியளவில் ஆரம்பமான இரண்டாவது போட்டியில் திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விக்பூட் அணியும், யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜங்கன்றீஸ் அணியும் மோதின. மிகவும் இறுக்கமான நிலையில் போட்டியிட்ட இரு அணிகளும் இடைவேளைக்கு முன்பு எந்தக் கோல்கள் எதனையும் போட்டுக்கொள்ளவில்லை. பதிலாக இடைவேளைக்கு பின் சில நிமிடங்களில் ஜங்கன்றீஸ் அணி கோல் ஒன்றை போட்டு 1-0 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற மூன்றாது நாள் இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் லக்கிஸ்ரார் அணியும், மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் புனித ஜோசப் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த இந்தப்போட்டியில் புனிதஜோசப் அணி 2-0 என்ற கோல்கணக்கில் லக்கிஸ்ரார் அணியை தோற்கடித்தது.

நேற்றைய போட்டிகளுக்கு நடுவர்களாக சிவலிங்கம், சாண்டைஸ், அருளானந்தசோதி புவேந்திரராசா, சிவநேசன், சிவலிங்கம், ரஜனிகாந், கதிர்காமநாதன் ஆகியோரும் கடமையாற்றினர்.

இன்று மேற்படி சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் முதலாவது அரையிறுதியில் யாழ்.மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் போட்டியிடும். அடுத்து திருகோணமலை மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் போட்டியிடும்.

பின்னர் மாலை 3.00 மணியளவில் வெற்றி கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. (கு)



மன்னார் மாவட்ட அணியினர்...



யாழ்.திருமலை அணியினர்...

## மாந்தை கிழக்கு கோட்ட உடற்பயிற்சி போட்டி

கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்கள் பிரிவுக்கான உடற்பயிற்சிப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. முதலாம் இடம் மு/நட்டாங் கண்டல் அ.த.க.பா, இரண்டாம் இடம் மு/பாலிநகர் ம.வி, மூன்றாம் இடம் மு/பாண்டியன் குளம் ம.வி.யும் பெற்றுக் கொண்டன.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை வரும் 20 ஆம் திகதி

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கான மீட்டல் வகுப்புக்கள் தற்போது யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் நடை பெற்று வருகிறது. இது வரும் சனிக்கிழமை வரை நடைபெறும் என உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் தெரிவிக்கிறது. (33)

# சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியை

# ஒரு இன்னிங்ஸ், 21 ஓட்டங்களால் வென்றது தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்ற சிம்பாப்வே -தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்கா ஒரு இன்னிங்ஸ் மற்றும் 21 ஓட்டங்களால் சிம்பாப்வேயை தோற்கடித்தது.

கடந்த மூன்றாம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் சிம்பாப்வே முதல்நாளே தனது முதல் இன்னிங்சில் வெறும் 54 ஓட்டங்களுக்குஅனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அதனைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை ஆடிய தென்னாபிரிக்க அணி மூன்று விக்கட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களைக் குவித்ததுடன் முதலாவது இன்னிங்சை நிறுத்திக் கொண்டது. அணியின் தலைவர் ஸ்மித் 121 ஓட்டங்களைப் பெற்றார். கலிஸ்குறைந்த பந்துகளில் அரைச்சதம் பெற்று சாதனை படைத்தார்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்சை ஆடிய சிம்பாப்வே அணி 265 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இரண்டாவது இன்னிங்சில் டியோன் இக்ராகிம் ஆகக்கூடுதலாக 72 ஓட்டங்களையும் அண்மையில் அணிக்குத் திரும்பிய முன்னாள்வீரர்பிளிக்னட் ஆறு சிக்ஸ்சர்கள், மூன்று பவுண்ட்ரிகள் உட்பட 58 பந்துகளை சந்தித்து வேகமாக 61 ஓட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்கா சார்பில் போயே நான்கு, நிட்டினி இரண்டு, லோங்வெல்ட் இரண்டு, கலிஸ் ஒன்று என விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# விளம்பர ஒப்பந்தத்தில் பிரச்சினை லாறா உட்பட ஏழு வீரர்கள் நீக்கம்



மேற்கிந்தியதீவு கிரிக்கெட் அணியின் முக்கிய அனுசரணையாக 'டிஜி செல்' உள்ளது. அணித்தலைவர் லாறா, ராம்நரேஷ் சர்வான், கெய்ல், ிராவோ, சுமித், எட்வர்ட்ஸ், ரவிராம்பால் ஆகிய ஏழு வீரர்கள் 'கேபிள் அண்ட்வயல்லெஸ்' நிறுவனத்துடன் அனுசரணை ஒப்பந்தம் செய்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யும்படி மேற்கிந்திய தீவு கிரிக்கெட் சபை வீரர்களைக் கேட்டுக் கொண்டது. ஆனால் வீரர்கள் இதனை ஏற்கவில்லை. இதனால் பிரச்சினை நிலவி வந்தது.

இந்த நிலையில் தென்னாபிரிக்க மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் ஒப்பந்த விதிமுறையை மீறிய லாறா உட்பட ஏழு வீரர்கள் அணிக்கு தேர்வு செய்யப்படமாட்டார்கள் என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் டெட்டி கிரிபித் அறிவித்துள்ளார்.




## உடுவில் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மை போட்டி

சுனாமியின் அனர்த்தங்கள் தாக்கங்களை வெளிப்படுத்தி உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இடம்பெற்றுள்ளது.


இல்லச் சோடனை முதல் விநோத உடைப்போட்டி வரை சுனாமியின் தாக்கம் மற்றும் இழப்புக்கள், பாதிப்புக்களை வெளிப்படுத்தி செயல்படுத்தப்பட்டமை பார்த்தோர் உள்ளங்களை நெருடியுள்ளது.

கௌவ்லாண்ட் இல்லத்தினர் தமது இல்லத்தை இலங்கை முகப்பாகக் கொண்டு அதில் சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற இடங்களை அடையாளம் செய்து இருந்தனர்.

இதேபோன்று விநோத உடைப் போட்டியிலும் கூட கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், பிள்ளைகளை இழந்த பெற்றோர் என பல இழப்புக்களையும் வெளிப்படுத்தி மாணவிகள் பங்குகேற்றனர். (41)

# 'பார்முலா-1' கார் பந்தயம்

# இத்தாலி வீரர் பிசிசெல்லா வெற்றி



கார் பந்தயத்திலே மிகவும் பிரபலமானது 'பார்முலா1' கார் பந்தயம் ஆகும். இந்த ஆண்டுக்கான 'பார்முலா1' கார் பந்தயம் உலகம் முழுவதும் 19 நகரங்களில் நடக்கிறது. இதன் முதல் பந்தயமான அவுஸ்திரேலிய 'கிராண்ட் பிரீ பார்முலா1 பந்தயம் மெல்போனில் நேற்று நடந்தது.

இதில் ஏழு உலக சம்பியன் பட்டம் பெற்ற மைக்கேல் ஷுமாக்கர் (ஜெர்மனி), ரூபன் பாரிச்செல்லோ(பிரேசில்), ஜென்சன் பட்டன் (இங்கிலாந்து), பெர்னான்டோ அலோன்சா (ஸ்பெயின்), ஜியான்கார்லோ பிசிசெல்லா(இத்தாலி), மான்டொயா (கொலம்பியா), ஜார்னோ துருளி(இத்தாலி) போன்ற முன்னணி வீரர்கள் உட்பட 20 பேர் பங்கேற்றனர்.

இந்த புகழ் பெற்ற பார்முலா1 கார்பந்தயத்தில் கோவையை சேர்ந்த நரேன் கார்த்திகேயனும் கலந்து கொண்டார். ஜோர்டான் அணிக்காக அவர் பங்கேற்றார். இதன் மூலம் 'பார்முலா1' கார் பந்தயத்தில் பங்கேற்ற முதல் இந்தியர் என்ற பெருமையை நரேன் பெற்றார்.


நேற்று முதலாவது தகுதி சுற்று நடந்தது. இதில் நரேன் கார்த்திகேயன் ஒன்பதாவது இடத்தைப் பிடித்தார். ஒரு சுற்றை அவர் கடந்த சிறப்பான நேரம் ஒரு நிமிடம் 44.32 வினாடி ஆகும்.

இந்திய நேரப்படி நேற்று அதிகாலை இரண்டாவது தகுதி சுற்று நடந்தது. இதில் நரேன் கார்த்திகேயன் கடந்த சிறப்பான நேரம் ஒரு நிமிடம் 32.73 வினாடியாகும். இரண்டு தகுதி சுற்றின் சராசரி அடிப்படையில் நரேன் கார்த்திகேயனுக்கு 12ஆவது இடம் கிடைத்தது.

இந்திய நேரப்படி நேற்று காலை 8.30 மணிக்கு 'பார்முலா1' கார்பந்தயம் மெல்போர்னில் ஆல்பர்ட் பார்க் சர்க்கியூட்டில் தொடங்கியது. இத்தாலி வீரர் ஜியான் கார்லோ பிசிசெல்லா தொடக்கத்தில் இருந்தே முன்னிலை பெற்றார்.

57 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் பிசி செல்லா வெற்றி பெற்றார். அவர் கார் பந்தய தூரத்தை ஒரு மணி 24 நிமிடம் 17.33 வினாடிகளில் கடந்தார். இந்த வெற்றி மூலம் அவருக்கு 10 புள்ளிகள் கிடைத்தது. பிசிசெல்லா ரொனால்ட் அணிக்காக பங்கேற்றார்.


## துபாய் ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் டேவன்போர்ட்



துபாய் ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் லின்சே டேவன் போர்ட் யெலினாயங்கோவிக்கை 6-4, 3-6, 6-4 என்ற செட்கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இப்போட்டியில் இருவரும் ஆரம்பத்தில் சேவிஸ்களை தவறவிட்டாலும், முதல் செட்டின் ஐந்தாவது ஆட்டத்தில் டேவன் போர்ட்டின் கை ஓங்கியது.

இரண்டாவது செட்டில் யங்கோவிக் 4-2 என்று முன்னணி வகித்த போதும் மூன்றாவது செட்டில் டேவன் போர்ட் அதனை முறியடித்தார். இது பற்றி டேவன் போர்ட் கூறும் போது; இந்தப் போட்டிகளில் முழுத்திறனையும் வெளிக்காட்டாத நிலையிலும் பல சவால்களை எதிர் கொண்டதாக தெரிவித்தார். அத்துடன் இது தனக்கு முழு நம்பிக்கையைத் தருகிறது. தனது ரசிகர்கள் தனது வெற்றியை எதிர் பார்த்தனர் என்றும் தெரிவித்தார்.



## சிந்தனைக்கு

*உலகத்தில் எந்த ஒரு நாடும் இரத்தம் சிந்தாமலும் தியாகங்கள் புரியாமலும் சுதந்திரம் பெற்றதில்லை.*

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 07-03-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## தமிழர்கள் தானே...!

யாழ்.நகரப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவ வாகனம் மோதியதில் மாணவி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவமானது "சாதாரண விபத்து" என்ற வகையில் பார்க்கப்படக் கூடியதல்ல என்ற யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளரின் அறிவுறுத்தலானது முற்றிலும் நியாயப்பாடானதொன்றே. ஏனெனில் இவ்விபத்திற்கு ஒரு புறத்தில் அரசின் தேவையற்ற செயற்பாடுகளும் அரசு தீர்க்கத்தவறிய பிரச்சினைகளும் உள்ளன.

யாழ். குடா நாட்டைப் பொறுத்து குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் போக்குவரத்தில் சிறிலங்கா இராணுவம் பல்வேறு இடையூறுகளைத் தோற்றிவித்துள்ளது. எடுத்துக்காட்டாக வீதிகளை மூடியிருத்தல்,வீதிகளில் காவலரண்களை அமைத்திருத்தல், வாகனங்களின் வேகத்தைக் குறைக்க வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியிருத்தல் போன்ற பல காரணிகள் உண்டு.

இதற்கு முன்பதாக யாழ்.குடா நாட்டில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரின் தேவைக்கெனப் பல்வேறுவகையான – அதாவது கனரக வாகனங்களிலிருந்து சிறிய மோட்டார் சைக்கிள் வரை பெருமளவிலான வாகனங்கள் புழக்கத்திலுமுள்ளன.

அதாவது ஒரு புறத்தில் பெருந்தொகையான இராணுவ வாகனங்கள், மறுபுறத்தில் வீதிகள் பாவனைக்குத்தடை, வீதியில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையிலான நடவடிக்கைகள் என்பன போக்குவரத்தில் பெரும் சிரமத்தையும், அபாயத்தையும் விளைவிப்பவையாக உள்ளன.

இத்தனைக்கும் இவையாவும் தேவையற்றவை மட்டுமல்ல விடுதலைப் புலிகளுக்கும் – சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு மாறானவையும் கூட. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டின் படி இராணுவத்தினரின் வீதித்தடைகள் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் அம்சங்கள் நீக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆனால் சிறிலங்கா இராணுவம் அதற்குத் தயாராக இல்லை என்பது மட்டுல்ல,உடன்பாட்டில் கையொப்பம் இட்ட அரசாங்கத் தரப்பு இதில் அக்கறையுடையதானதாகவும் இல்லை. யுத்த நிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம் என்பது தற்போதைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பது போன்றேயுள்ளது.

இது ஒரு புறம் இருக்க யாழ்.நகரப்பகுதியின் தேவைகளுக்கு ஏற்ப அங்கு வீதி அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. அதாவது சிங்கள அரசாங்கங்கள் அதிகரித்த வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ற விதத்திலான வீதி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டதாக இல்லை.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து யாழ். குடா நாடும் சரி, தமிழர் தாயகப்பகுதி எங்கிலும் சரி அவை சந்தைக்குரிய இடங்களாக இருக்கின்றனவே ஒழிய அரசின் பார்வையில் அவை அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேவை உள்ளவையாகப் படுவதில்லை. அவ்வாறு இல்லாதுவிடில் யாழ்.குடா நாட்டில் அதிகரித்த வாகனத்தொகையை மனதிற்கொண்டே அரசாங்கம் வீதி அபிவிருத்திப்பணிகளை மேற்கொண்டிருக்கவேண்டும்.

ஆனால் அரசாங்கத்தரப்பு தமிழர் தாயகப் பகுதியில் அவ்வாறான அபிவிருத்திப் பணிகள் எவற்றையும் மேற்கொண்டதாக இல்லை. மாறாக மேலும், மேலும் தமிழர் தாயகப் பகுதியில் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளையும் அவற்றிற்கான ஏற்பாடுகளை செய்வதிலுமே அக்கறை காட்டுவதாகவுள்ளது.

அதாவது சிறிலங்கா அரசைப் பொறுத்து தமிழர் தாயகப் பகுதியை தமது ஆக்கிரப்பில் வைத்துக்கொள்வதும் அங்குள்ள வளங்களை வசதிகளை சுரண்டிக்கொள்வதுமே அதன் நோக்கமாகும். இத்தகைய நிலைப்பாட்டின் காரணமாகவே யாழ்.குடாநாட்டில் அடிக்கடி இராணுவ வாகனங்கள் மக்களைப் பலியெடுக்கும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சம்பவங்களுக்கு மேற்கூறிய காரணிகளை விட கொல்லப்படுபவர்கள், பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் தானே என்ற இராணுவத்தினரின் பொறுப்பற்ற மனோநிலையும், தமிழர் மீதான நடவடிக்கைகளுக்கு சட்டம் தம்மைத் தண்டித்துவிடப் போவதில்லை. என்ற நம்பிக்கையும் வாகனங்களைச் செலுத்த காரணமாகிறது.

ஆகையினால் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி குறிப்பிட்டது போன்று விபத்துக்களின் பின்னால் உள்ள பிரச்சினைகளும் கவனத்திற்கொள்ளப்படவேண்டும்; களையப்படவேண்டும். அதை விடுத்து அரசாங்கம் மாற்றான் தாய் மனப்பான்மையுடனும், ஆயுதப்படைத்தரப்பு பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் தானே என்ற ஆக்கிரமிப்பு மனோபாவத்துடனும் செயற்படுவார்களேயானால் இது போன்ற விபத்துக்களும் – இதற்கு எதிராக தமிழ் மக்களின் உணர்ச்சிகரமான செயற்பாடுகளும் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

## திருமலையில் பௌத்தவிகாரைக்கு அண... வீடுகள் அமைக்க ஜே.வி.பி முய...

திருகோணமலை முற்ற வெளி மைதானத்தில் ஜே.வி.பி கட்சியினரால் சட்டவிரோதமாக வீடுகள் அமைக்கும் திட்டம் மக்கள் போராட்டத்தின் காரணமாக கைவிடப்பட்டதையடுத்து இங்கு கொண்டு வரப்பட்ட பொருட்கள் பொலிசாரால் எடுத்துச் செல்லப்பட்டு கொட்டைப் பகுதியில் வைக்கப்பட்டது. தற்போது திருகோணமலை கண்டி வீதியில் ஐந்தாவது மைல் கல் பகுதியில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்குப் பின்புறமாக வீடுகளை அமைக்கும் முயற்சியில் மக்கள் விடுதலை முன்னணியினர் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக இந்த பௌத்த விகாரையின் பின்புறம் கனரக வாகனம் கொண்டு சுத்திகரிக்கப்படுகின்றது. இந்தப்பகுதி வன இலாகா திணைக்களத்தினால் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும் ஒரு பிரதேசமாகும். சுமார் ஐந்து ஏக்கர் பரப்பான பிரதேசம் இவர்களால் சுத்திகரிக்கப் படுகின்றது. கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிகமாக குடியேற்றுதற்கு மாவட்டச் செயலகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் ஜே.வி.பியினர் தன்னிச்சையாக இந்த இடத்தில் வீடமைப்பு திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர். திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயல[illegible] பகுதியில் மிகுந்தபுரம், லவ்[illegible], அபயபுரம் ஆகிய பகுதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கும் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தலைமையில் ஜே.வி.பியினர் இவ்வாறு ஐந்தாம் கட்டை பகுதியில் மக்களை தற்காலிகமாக குடியேற்றுவதற்காக அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டம் பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (32)

## கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்துள் அமைக்கப்பட்டுவரும் கட்டடங்கள் அகற்றப்படும்

### -அரசாங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கடற்கரையிலிருந்து 100மீற்றர் தூரம் கடற்கோள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனால் இந்த எல்லையினுள் அமைக்கப்படும் கட்டடங்கள் இராணுவத்தின் துணையுடன் இடித்து அகற்றப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதுகாப்பமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜா இந்தத் தகவலை தெரிவித்துள்ளார். நில அளவைத் திணைக்களம் கடற்கரையிலிருந்து 100மீற்றர் தூரத்தை அளந்து வரைபடப்படுத்தியுள்ளதுடன், நகர அபிவிருத்திச்சபை இப்பகுதிகளில் எல்லைக்கற்களை நடும்பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார் (32)

## நடிப்புக்கான தேசிய விருதைப் பெறும் தகுதி அரசாங்கத்திற்கு உண்டு

### எதிர்க் கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பிரச்சினைகள் என்று வரும்போது நடிப்பை மேற்கொள்கின்றது. பிரச்சினை ஒன்றைக் கூறுவதற்கு அவர்கள் நடிக்கின்றனர். இந்த அரசாங்கம் இந்த ஆண்டிற்கான சரஸவிய விருதைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி உள்ளதென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். மதுகிரிய பகுதியில் நேற்றுக் காலை ஐ.தே.கட்சியின் செயற்பாட்டாளர் மத்தியில் உரையாற்றும் போது ரணில் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், மூன்று மாதங்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதாகக் கூறினார்கள். இதே வேளை அந்த மூன்று மாதக் காலப்பகுதிக்குள் வேலை வாய்ப்புக்களை வழங்காது விட்டால் நாங்கள் அரசாங்கத்திலிருந்து விலகுவோம் என மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் தனது நடிப்பை வெளிப்படுத்தியது. இன்றும் ஒத்திகை செய்கின்றனர். எவரும் விலகவில்லை. பசளையை 350 ரூபாவிற்கு தற்போது வழங்குகிறீர்களா எனக் கேட்டோம். இல்லை முதலில் நாங்கள் 500 ரூபாவிற்கு வழங்குகின்றோம். பின்னர் 350 ரூபாவிற்கு வழங்குகின்றோம் எனக் கூறுகின்றார்கள். அப்போது இதனை வழங்காது விட்டால் அரசில் இருந்து விலகுவோம் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்தது. இறுதியில் பசளையின் விலையும் அதிகரித்தது. பிரச்சினை என்று ஒன்று ஏற்பட்டால் தீர்வு காண்பதில்லை அப்போது நடிக்க ஆரம்பிப்பார்கள். இது மக்களை ஏமாற்றுவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்து. பிரச்சினை அவ்வாறே இருக்கும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும், வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கும் விவசாயிகளின் வருமானம் குறையும் அனைத்துப் பிரச்சினைகள் வரும் போதும் நடிப்பை மேற்கொள்ளும் அரசாங்கமே இங்குள்ளது. பிரச்சினை ஒன்றைக் கூறுவதற்கு அவர்கள் நடிக்கின்றனர். இந்த அரசாங்கம் இந்த ஆண்டிற்கான சரஸவிய விருதைப் பெற்றுக் கொள்ள முடியும். நடிப்பிற்குச் சிறந்தது அந்த விருதைப் பெற்றுக் கொள்ளும் அரசின் படம் "கடவுனு பொருந்துவ" தமிழில் ஏமாற்று வித்தை என்றார் ரணில் விக்கிரமசிங்க.

## தொழில் வாய்ப்புகள் வழங்கும் விடயத்தில் பிரதி அமைச்சர்கள் புறக்கணிப்பு

### – அமைச்சர்கள் மீது பிரதியமைச்சர் குற்றச்சாட்டு

மக்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் போது குறிப்பிட்ட அமைச்சர்கள் தமது பிரதியமைச்சர்களுடனும் கலந்துரையாடாமல் வழங்கி வருவதையிட்டு பிரதியமைச்சர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது போன்ற செயற்பாடுகளால் தமது ஆதரவாளர்கள், அங்கத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கும் பிரதியமைச்சர்கள் குழு இது தொடர்பான விடயத்தில் அமைச்சர்கள் அசமந்தப் போக்குடன் செயற்படுவார்களானால் இதற்கெதிராகப் பெரும் போராட்டம் நடத்தப்படுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதே வேளை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தற்போது இருக்கும் நிலைமை ஒரு நல்ல தருணம் எனவும் காலத்தை வீணடிக்காமல் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டுமெனவும் இவ் விடயத்தில் மேலும் காலம் தாழ்த்தப்பட்டு வருமானால் நாடு பெரும் அழிவுகளைச் சந்திக்குமெனவும் பிரதியமைச்சர்கள் குழு சனாதிபதியை கேட்டுக்கொண்டுள்ளது.

## சு.க. சனாதிபதி வேட்பாளர் பெயரை வெளியிட கட்சியினர் வலியுறுத்து

வரவிருக்கும் சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் சனாதிபதி வேட்பாளரின் பெயரையும் பின்னர் நியமிக்கவிருக்கம் பிரதமரின் பெயரையும் வெளியிடுமாறு சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சனாதிபதி சந்திரிகா குமார துங்கவைக் கேட்டுள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் முன்மொழியப்பட்டிருப்பதும், அக்கட்சி எதிர்வரும் சனாதிபதி தேர்தலுக்கான பிரச்சார வேலைகளில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளமையை அடுத்தே சுதந்திரக்கட்சியினர் தமது வேட்பாளரின் பெயரை வெளியிடுமாறு சனாதிபதியைக் கேட்டுள்ளனர்.

### தாய்லாந்து இளவரசி இலங்கை வருகை

தாய்லாந்தின் இளவரசி கல்யாணிவதானா நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவருடன் தாய்லாந்து தூதுக் குழு வினரும் வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# ...க்கான பாடப்புத்தகங்கள் ...அனுப்பப்படவில்லை

## ...க்கு தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

...ஆண்டு ...ரம்பித்து ...யும் தமிழ் ...துவரை இல ... அனுப்பி வைக் ...வியில் சமத்துவம் ...கையை மீறுவதாக ...ள்ளதாக இலங்கைத் ஆசிரியர் சங்க பொதுச் ...லாளர் மகாசிவம் சனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சிங்கள மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் கல்வித்திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் தமிழ் மாணவர்களே புறக்கணிக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலப் பாடப்புத்தகங்கள் மாத்திரம் 25 சதவீதமானவை தமிழ் மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. சனாதிபதியான தாங்கள் இது விடயத்தில் உடன் கவனம் செலுத்தி தமிழ் மாணவர்களுக்கு கல்வியில் பாரபட்சம் ஏற்படாது தங்களின் கல்வித்திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறோம் என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துணுக்காயில் உந்துருளிகள் விபத்தில் 2 பேர் படுகாயம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் வீதி விபத்தில் இரண்டு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தேறாங்கண்டல் பகுதியில் வசிக்கும் சோ. சிவன்ராஜ் (உக்கு) (வயது-20) புதுக்குடியிருப்பை சேர்ந்த ஜெ.இராசலிங்கம (திருவருள்) (வயது-26), எனும் இருவரும் படுகாயமடைந்தனர்.



மல்லாவி மருந்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்கைக்காக கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் துணுக்காய் சாலையில் சம்பந்தர் மில் சந்திக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்தை துணுக்காய் காவல்துறை பணிமனையினர் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர். ஜெ.இராசலிங்கம் என்பவரை மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டடுள்ளார்.

## விடுதலைப்புலிகளை...

புலிகளின் பொறுமையை உச்ச அளவில் பாதித்துள்ளது. இதனால் ஏற்படப்போகும் பின் விளைவுகளை சிறிலங்கா அரசும் அதன் படைத்தரப்புமே ஏற்க வேண்டுமென்றும் அவர் மேலும் கூறினார்.

## அலுவலகம்...

மீறல் நடவடிக்கைகளைக் கண்டித்து மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும்.

இப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அணி திரளவுள்ளனர். (33)

## ராணுவ...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மூன்று வருடங்களிற்கு முன்னர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது அந்த உடன்படிக்கையினை சிறிலங்கா படையினரோ அல்லது அரசோ மதித்து நடைமுறைப்படுத்தியிருந்தால் மக்கள் குடியிருப்புக்களில் இருந்த இராணுவத்தினர் வெளியேறியிருப்பார்கள். மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பிரதேசங்களில் படையினரின் நடமாட்டமோ படை வாகனங்களின் நடமாட்டமோ இருந்திருக்காது. ஆனால் அரசு ஒப்பந்தத்தை மதித்து அதனை சரியான முறையில் நடைமுறைப்படுத்த தவறியமையால் இன்று சிறிதளவு நிலப்பரப்பினுள் நாற்பதினாயிரத்திற்கும் அதிகமான படையினரும் அவர்களுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான பாவனைக்குதவாத இராணுவ வாகனங்களினதும் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாலேயே அதிகமான விபத்துக்கள் ஏற்படுவதும் குழப்பங்கள் உருவாகுவதும் நடைபெறுகின்றது. எனவே தொடர்ந்தும் மக்களது இயல்பு வாழ்விற்கு குந்தகமாக இருக்கும் படையினர் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து வெளியேற வேண்டும் எனக் கோருவதுடன் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொலைகளையும் அத்து மீறல்களையும் கண்டிக்கும் முகமாக இன்று துக்கதினமாக அனுஷ்டிக்கும் படி அன்புடன் வேண்டுகின்றோம்.

துக்க தினத்தை முன்னிட்டு இன்று காலை சகல பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகம், தொழிநுட்பக் கல்லூரி, உயர் தொழில் நுட்ப நிறுவனம், கல்வியியற் கல்லூரி மாணவர்கள் அனை வரும் ஆசிரியகலாசாலை மாண வர்கள்,ஏனைய தனியார் கல்வி நிலைய மாணவர்கள் அனைவரும் மற்றும் அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவன அதிகாரிகள் ஊழியர்கள் அனைவரும் கறுப்புப் பட்டிகளை அணிந்து கடமைகளில் ஈடுபடும் படியும் வர்த்தக நிறுவனங்கள் போக்குவரத்து வாகனங்கள் அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்திலும், கறுப்புப் கொடிகளை பறக்க விடும்படியும் வேண்டுகின்றோம். மேலும் பகல் 11 மணிக்கு சகல மாணவர்களும் தமது வகுபபுக்களில் எழுந்து நின்று மூன்று நிமிடம் கொல்லப்பட்ட பாடசாலை மாணவிக்கும், பொது மகனுக்கும் அகவணக்கம் செலுத்தும் படி வேண்டுகின்றோமெனவும் கேட்டுள்ளது.

துக்க தினமான இன்று மக்களுடைய சகல செயற்பாடுகளும் வழமை போன்று இடம்பெறும். மக்களது இயல்பு வாழ்வுக்கு குந்தகம் ஏற்படுத்தாத வகையில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும் என்பதுடன், வீதித் தடைகளை ஏற்படுத்துதல் மற்றும் வீதிகளில் ரயர்களை போட்டு எரிப்பதனை முற்றாகத் தவிர்க்கும் படியும், அன்புடன் வேண்டுகின்றோம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(36,33,27)

## போராட்டம்....

தரப்பினருடன் முஸ்லிம் பிரதிநிதி களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணக்கப்பாடு ஏற்பட்டதை அடுத்து இந்தப் போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டுள்ளது. இரண்டு வார காலப்பகுதியில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதாக இராணுவம் மற்றும் காவல்துறை தரப்பினர் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இப்பகுதியில் இப்போராட்டம் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. புல்மோட்டை மையவாடியில் கும்பல் ஒன்று அங்கு அடக்கம் செய்யப்பட்ட உடல்களை தோண்டி எடுத்தமைக்கு ஆட்சேபனை தெரிவித்தே இப்போராட்டம் நடத்தப்பட்டது. அருகில் இருந்த இரணுவ முகாமைச் சேர்ந்த சிலரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் இச்செயலில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட வேண்டுமெனக் கோரியுமே இம் மக்களால் போராட்டம் நடத்தப்பட்டது. (32)

## புலிகளின்...

புலிகளுடன் ஆலோசித்து அவர்களை பங்குதாரராக்கி வடக்கு கிழக்கில் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவே ஆராய்ந்து வருகின்றன.

வழங்கப்படும் சுனாமி பாதுகாப்பு நிதியில் ஒரு பகுதி அன்பளிப்பாகவும், மறுபகுதி இலகு கடனாகவும் இருக்குமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இனந்...

மொகமட் உசைன், அப்துல் ஜவ்பார், மொகமட் ஹனிபா, சாருத்தம்பி ஜெஸ்மா ஆகிய முஸ்லிம்கள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான மொகமட் உசைன் என்பவரின் வீட்டில் தங்கியிருந்தவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதேவேளை இந்தக் கிராமாத்தில் மற்றுமொரு வீட்டில் தங்கியிருந்த முன்னாள் புளொட் உறுப்பினரான அர்ஜுன் செல்வராஜாவின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது அவர் ஸ்தலத்திலேயே பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கி தாரிகளின் தாக்குதலுக்கு இலக்கான மற்றுமொரு வீட்டில் தங்கியிருந்த விஜயசூரிய என்ற சிங்களவரும் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பிற்கும் கொழும்பிற்கும் இடையிலான தொடரூந்து இந்தப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த பொழுதில் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது இதனால் கிராமத்தவர்களுக்கு துப்பாக்கி சத்தங்கள் கேட்கவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலுக்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை தகவல்கள் வெளியிடப்படவில்லை. நேற்று முன்தினம் காலை இந்தப் பகுதியில் இராணுவத்தினர் விசேட தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## தீர்க்கமான....

மானங்களைக் கட்டி எழுப்பி இன்று எங்கள் நிலப்பிரதேசத்தின் அறுபது,எழுபது வீதமான நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து முழு மக்களுடைய ஆதரவோடும் பங்களிப்போடும் எங்களுடைய விடுதலைப் போராட்டம் மிக உயர்ந்த ஒரு நிலையில் இருக்கின்றது. இதற்குக் காரணம் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக கொல்லப்பட்டமையும், தொடர்ந்து தமிழ் மக்கள் சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்தமையும், தமிழ் மக்கள் மீது பெரியதொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சிங்களப் படைகள் எடுத்ததுமே எங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றது.

ஆகவே தமிழ் மக்கள் மீது இப்படியான படுகொலைகளை தொடர்ந்தும் செய்து கொண்டிருந்தால் விடுதலைப்புலிகள் பொறுமை காத்துக் கொண்டிருப்பார்கள் என்பது எதிர் பார்க்க முடியாததொன்று. விடுதலைப்புலிகள் - ஒரு காலத்தை - ஒரு சந்தர்ப்பத்தை - தெற்கிற்கு - சிங்கள அரசாங்கங்களுக்கும் இனவாதிகளுக்கும் வழங்கியிருந்தார்கள்.

தமிழ் மக்கள் எப்பொழுது இதில் இருந்து சலிப்படைந்து வெறுப்படைந்து அவர்கள் ஒரு உறுதியான முடிவை எடுக்கிறார்களோ அந்தக் கட்டத்தில் விடுதலைப் புலிகளும் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பார்கள். நிச்சயமாகப் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு பொறுமை என்பதற்கும் உண்மையில் கணிசமான அளப்பெரிய தியாகங்களைச் செய்துவிட்டோம்.

இனி அடுத்த கட்டமாக சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் எங்களுடைய செய்தியை ஆணித்தரமாகக் கொடுத்திருக்கின்றோம். எதிர் வரும் காலங்களில் இப்படியான போக்குகளில் இருந்து மாற்றங்கள் ஏற்படா விட்டால் நிச்சயமாக நிலைமை மோசமடையும் என்றே நான் கருதுகின்றேன் என்றார்.

ஜே.வி.பி ஒத்துவரவில்லை என்பதற்காக இவர்களுக்குள் முரண்பாடு வருகின்றது என்பது வெளிப்படையாகக் காட்டப்படுகின்ற ஒன்று. ஆனால் அதில் எந்தவித உண்மையும் இல்லை.

அவர்களுக்குள்ள மக்கள் ஆதரவைத் திரட்டிக் கொள்வதோ- இல்லாவிடில் பதவிகளைப் பிடிப்பதற்கான போட்டிகளில் உள்ள முரண்பாடுகள் தான் தீவிரமடைந்திருக்கின்றது.

ஆனால் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வது தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் கொண்டு வருவதை ஜே.வி.பி எதிர்ப்பது போலவும், சனாதிபதியும், அரசாங்கமும் சங்கடப்படுவது போலவும் காட்டப்படுகின்றது. ஆனால் அது நிச்சயமாக நடைபெறவில்லை வெளிப்பார்வைக்குள் காட்டப்படுகின்ற ஒரு தோற்றப்பாடே.

சர்வதேச சமூகத்திற்கு தங்கள் உள் முரண்பாட்டை சர்வதேச அழுத்தங்களுக்காக காட்டப்படுகின்ற ஒரு படமே.-நாடகமே-தவிர உண்மையில் அவர்களுக்குள் உள்ள பிரச்சினை வேறு.

ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்து கொள்வதும், அதனைப் பகிர்ந்து கொள்வதும், இனிவரப்போகின்ற தேர்தலோ, சனாதிபதித் தேர்தலோ அதற்கு வேட்பாளர்களை நியமிப்பதும், வந்த சர்வதேச உதவிகளைப் பிரித்துக்கொள்வதிலும், அதனைப் பயன் படுத்திக்கொள்வதிலும், உள்முரண்பாடுகள் நிறையவே அவர்களுக்குள் இருக்கின்றது. இதில் வெளிப்படையாகக் காட்டப்படும் நாடகம் வெறும் போலித்தனமானது.

என்னைப் பொறுத்தவரை இதனை ஆட்சி பீடத்திலுள்ள சனாதிபதியும் அனைவரும் இணைந்துதான் தமிழர் விரோதப் போக்கிற்கான ஒரு திட்டமிட்ட செயற்பாடுகளை நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். ஜே.வி.பியினுடைய எதிர்ப்பென்று அதனைச் சொல்ல முடியாது.

விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்த வரையில் நாங்கள் எப்பொழுதுமே யுத்தத்தையோ, வன்முறையையோ பெரும் உயிரழிவையோ நாங்கள் விரும்பவில்லை. எங்கள் மக்கள் மீது அவை திணிக்கப்படும் பொழுது அதனை எதிர் கொள் வதற்காக எங்களுடைய மக்களையும், தேசத்தையும் பாதுகாத்துக்கொள்வதற்கான ஒரு தற்காப்பு நிலையாகத்தான் எங்களுடைய விடுதலை அமைப்பு கட்டி எழுப்பப்பட்டது.

உயிரழிவும், இழப்புக்களும் அவலங்களும் இல்லாமல் நாங்கள் ஒரு நல்ல எதிர் காலத்தைக் கட்டி எழுப்பலாம். அதற்கான ஒரு சந்தர்ப்பமாகத் தான்-விடுதலைப் புலிகள் மீது ஒரு நிழல் யுத்தத்தை படுகொலைகளைச் செய்து கொண்டிருக்கின்ற சூழலிலும், இவ்வளவு இழப்புக்களையும் தாங்கிக் கொண்டு நாங்கள் சந்தர்ப்பத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். பொறுமை காக்கின்றோம். ஆனால் தொடர்ச்சியாகச் சிங்கள அரசாங்கம் இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்குமாக இருந்தால் தமிழ் மக்கள் மீதும் தமிழர் தேசம் மீதும் ஒரு யுத்தத்தைச் சுமத்துமேயாக இருந்தால் விடுதலைப்புலிகள் தீர்க்கமான முடிவை எடுப்பார்கள். அதனை எதிர்கொள்வதற்கு மிகத்துணிகரமான துணிச்சலான தீர்மானங்களை எடுத்து அடுத்த கட்டத்திற்குச் செல்வார்கள். என்பதிலையே நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கையைச் செலுத்துகின்றோம் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது